பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 26 செவ்வாய்க்கிழமை (10-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:226

# யாழ். பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரையும் மூடப்பட்டதாக அறிவிப்பு!

## உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை10

**யாழ்.பல்கலைக்கழகம் இன்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**உயர் கல்வி, தகவல் தொழில்நுட்ப அமைச்சரின் பணிப்பின் கீழ் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் வழங்கியுள்ள உத்தரவை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை நேற்றிரவு தெரிவித்தார்.**

விடுதிகளிலுள்ள யாழ். மாவட்ட மாணவர்கள் தத்தமது விடுதிகளில் இருந்து நாளை மாலை 5மணிக்குள் வெளியேற வேண்டும் என்று துணைவேந்தர் கேட்டுள்ளார்.

விடுதிகளில் உள்ள வெளிமாவட்ட மாணவர்களுக்கான ஒழுங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதிகளில் இருக்கும் மாணவர்களோ ஏனைய மாணவர்களோ பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை மற்றும் நிர்வாகம் தொடர்பான கட்டடங்களுக்குள்ளோ அவை அமைந்திருக்கும் வளவுக்குள்ளோ பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### மணலாறில் மோதல்

கொழும்பு,ஜூலை10

மணலாறு அருகே கம்பிளிவெவ என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் நடைபெற்றதாகவும் -

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 5பேர் உயிரிழந்திருக்கலாம் என்று நம்புவதாகவும் -

மோதல் நடந்த பகுதியில் பின்னர் படையினர் நடத்திய சோதனையில் ஒரு கிளைமோர் கண்ணிவெடி கண்டுபிடிக்கப்பட்டதாகவும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஒ)

யாழ்.சிறையிலிருக்கும்

## 50 இந்திய மீனவர்களில் 21 பேரை விடுவிக்க உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூலை10

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் [illegible]ப்பட்டிருந்த 50 இந்திய [illegible] 21 மீனவர்களை விடுதலை செய்வதற்கான உத்தரவு நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது.

தம்மை விடுதலை செய்து தமிழகத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கோரி 50 மீனவர்களும் நேற்றுக் காலை சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இது தொடர்பான தகவல் கிடைத்ததை அடுத்து நேற்று நண்பகல் அங்கு சென்ற யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராசா கைதிகளுடன் கலந்துரையாடினார்.

கைதிகளில் நோய்வாய்ப்பட்டோர், முதியோர், சிறுவர்கள், வலதுகுறைந்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'ரொக்கட் றெஜிமென்ட்' என்ற பெயரில் படைப்பிரிவு!

கொழும்பு, ஜூலை10

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஆயுதப்படை வரலாற்றில் முதல் தடவையாக 'ரொக்கட் றெஜிமென்ட்' என்ற படைப் பிரிவு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் நிலைகளைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் பொருட்டே இந்த 'ரொக்கட் றெஜிமென்ட்' அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் படைப் பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ள ரொக்கட் தாக்குதல் தொடர்பான பயிற்சி அனுபவம் இந்தியப் படையினரிடம் கூட இல்லை என்று கூறப்படுகின்றது.

விசேட பயிற்சி பெற்ற படையினரைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பிரிவு தற்போது வட-கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

மருதானைப் பாலியல் வல்லுறவு:

## சந்தேக நபர்களில் மூவர் அடையாளம் காட்டப்பட்டனர்

கொழும்பு,ஜூலை10

மருதானையில் சோதனைச்சாவடிக்குள் வைத்துக் கடந்த மாதம் 24ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மலையகத் தமிழ்ப்பெண், தன்னை வல்லுறவுக்குட்படுத்திய 3 பேரை நேற்று அடையாளம் காட்டினார்.

அன்றைய தினம் சம்பவம் நடைபெற்ற, சோதனைச்சாவடியில் கடைமையாற்றியதாகக் கூறப்படும் பொலஸாரும், படையினரும் கைது செய்யப்பட்டு அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டபோதே அவர்களில் மூவர் அடையாளம் காட்டப்பட்டனர்.

சம்பவ தினத்தில், அந்தப் பெண்ணுடன் துணைக்குச் சென்றபோது, விரட்டப்பட்டதாகக் கூறப்படும் நபரும், மேற்படி மூவரையும் அடையாளம் காட்டினார்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அடையாள அணிவகுப்பை நடத்திய நீதிவான் சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார். (உ-ஒ)

பாலியல் வல்லுறவுச் சம்பவம்:

## உயர் மட்டப் பொலீஸ்குழு அல்லாரையில் விசாரணை

தென்மராட்சி,ஜூலை10

அல்லாரைப் பகுதியில் சனியிரவு பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக உயர் மட்டப் பொலீஸ்குழு ஒன்று அங்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டது.

பிரஸ்தாபப் பெண்ணின் வீட்டுக்குச் சென்ற உயர்மட்டப் பொலீஸ் குழு அங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்ந்ததுடன், அருகில் உள்ள படை முகாம் அதிகாரிகளுடன் விசாரணைகளை நடத்தியது.

அதன் பின் மந்திகை ஆஸ்பத்திரியில் பிரஸ்தாபப் பெண்ணையும் அவரது தாயாரையும் சந்தித்து இந்தக் குழு விசாரணை நடத்தியது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளும் மந்திகை ஆஸ்பத்திரிக்குச் சென்று பிரஸ்தாபப் பெண்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது குற்றச்சாட்டை சுமத்துகிறது இராணுவத் தரப்பு

லண்டன்,ஜூலை.10

கடந்த சனிக்கிழமை அல்லாரையில் வயதான தாயாரைத் தாக்கிவிட்டு, அவரது 42 வயது மகளை பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவத்துக்கு இராணுவச் சீருடை அணிந்த விடுதலைப் புலிகளே பொறுப்பு என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன கூறியதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இது குறித்து தனது கொழும்பு செய்தியாளரின் செய்திக் குறிப்பை பி.பி.ஸி. ஒலிபரப்பியது.

இராணுவச் சீருடை அணிந்த தமிழ் பேசும் இருவர் தாயாரைத் தாக்கி, மகளை வல்லுறவுக்குட்படுத்தியதாகவும் -

சம்பவம் நடந்த போது அயல் வீட்டார்களுக்கு சத்தம் ஏதும் கேட்கவில்லை எனவும் -

சம்பவம் பற்றி அந்தப் பெண் அருகிலிருந்த இராணுவமுகாமுக்குத் தெரியப்படுத்திய போது பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய அவர் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

## பத்துத் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு பெருவிசனம்

கொழும்பு,ஜூலை10

தமிழ்ப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைக் கண்டித்து போராட்டம் நடத்திய கையோடு அல்லாரையில் மற்றும் ஒரு தமிழ்ப் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டிருப்பது குறித்து பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

இந்தச் செயலை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்தும் வகையில் அடுத்து மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு எதிர்வரும் வியாழக்கிழமை கூடவிருக்கின்றது.

அதேவேளை -

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் முப்படையினருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. (உ-3-4)

## கைதிகள் மீதான சித்திரவதைகள் குறித்து அதிகாரி வெளியிடும் அதிர்ச்சித் தகவல்கள்

லண்டன்,ஜூலை10

காவலில் இருந்த தமிழ்க் கைதிகளைச் சித்திரவதை செய்த அதிகாரிகள் தமது சப்பாத்தில் ஒன்றை சாணத்தில் தோய்த்த பின்னர், அதனை நாக்கால் நக்கிச் சுத்தப்படுத்தும்படி தமிழ்க் கைதி ஒருவரைப் பலவந்தப்படுத்தி, அப்பணியைச் செய்வித்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி எஸ்.ஸ்ரீதரன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே இத்தகவலை வெளியிட்டார்.

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 164 தமிழ்க் கைதிகள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படுவது பற்றி தாம் நடத்திய விசாரணைகள் தொடர்பாகவே அவர் பேட்டியளித்தார். அந்தப் பேட்டியில் அவர் கூறியதாவது:-

இந்த மாதம் முதலாம் திகதி பூஸா தடுப்பு முகாமுக்கு நானும் எனது சக அதிகாரியும் சென்றிருந்தோம். அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 164 தமிழ்க் கைதிகளில் நாலு பேரை விசாரித்து வாக்குமூலங்கள் பெற்றோம். விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நாசகாரத் தடுப்புப் பிரிவினரால் அவர்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல்களை தடுக்கவே கொழும்பில் பாதுகாப்பு வலயங்கள்

### அரசுத் தரப்பில் விளக்கம்

கொழும்பு,ஜூலை10

கொழும்பு நகரில் கேந்திர முக்கியத்துவம் மிக்க பொருளாதார நிலைகள் மீது கனரக வாகனங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளது தெரியவந்துள்ளதாலேயே, கொழும்பு மாநகராட்சி மற்றும் மேற்குக்கரைப் பகுதிகளை அதிஉயர் பாதுகாப்பு வலயமாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியதாக நேற்று வெளியிடப்பட்ட அரசுச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

அரசுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு இயக்கங்களைக் கட்டுப்படுத்தவே அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரகடனம் செய்யப்பட்டதாக சில பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டதில் எந்த உண்மையும் இல்லை என்றும் அரசு தெரிவித்தது.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து தென்னிலங்கையில் குறிப்பாக கொழும்பு நகரில், தாக்குதல் நடவடிக்கைகளை நடத்துவதில்லை என்று உறுதியளித்த விடுதலைப் புலிகள் அதனைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாகக் கூறப்படும் நிலையில் -

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் மக்கள் போராட்டங்களை கொழும்பின்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் 3 விடயங்களுக்குத் தீர்வு காண்க!

## மகாசங்கத்தினர் வலியுறுத்து

கொழும்பு,ஜூலை10

நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு சகல அரசியல் கட்சிகளும் இணைந்து ஏதாவது உடன்பாடு காண்பதாக இருந்தால், அந்த உடன்பாடு குறிப்பிட்ட கால நிர்ணயத்துக்குள் 3 பிரதான விடயங்களுக்குத் தீர்வு காண்பதாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு பௌத்த மகா சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மகாசங்கத்தைச் சேர்ந்த, வண. தல்லாலே தர்மலோக தேரர், வண. மாதிய வலவிஜிதசேன தேரர், வண. சியபாலகஸ்வெவ விமலசார தேரர், வண.அதுரலிய இந்திரரத்ன தேரர், பேராசிரியர் வண.குபுரகமுவ விஜிர தேரர், வண.கடுகாதவா தீரானந்த தேரர் ஆகியோர் உட்பட பல பிக்குகள் இணைந்து இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

3 முக்கிய விடயங்களாக -

★ உடனடி யுத்த நிறுத்தம்

★ தமிழ் மக்களின் உரிமைகளுக்கு அரசமைப்பு ரீதியாகப் பாதுகாப்பளித்தல்

★ குறைபாடுள்ள தற்போதைய தேர்தல் நடைமுறைகளை மறுசீரமைத்தல்

- ஆகியவற்றை அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மூன்றையும் தவிர மற்றவையும், தற்போதைய சூழ்நிலையில் மகளுக்கு அவசியமற்றவை என்றும் -

இவற்றைத்தவிர வேறெந்த உடன்பாடுகளும் நாட்டுக்கு நன்மையளிக்கப் போவதில்லை என்றும் -

மகா சங்கத்தினர் தெரிவித்தனர்.

வேறு எந்த விடயங்கள் குறித்து மேற்கொள்ளப்படும் முடிவுகளும், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகத் தெரிவித்து தனி நபர்கள் தமது நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளும் முயற்சியாகவே முடியும் என்றும் இந்த் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

பதவியையும், நிலைகளையும தக்கவைக்கும் முயற்சிகள் நாட்டைப் படுகுழியில் தள்ளிவிடும் என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

அத்துடன், அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உடன்பாடு என்பது அனைத்து குடிமக்களும், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல இன அமைப்புகளும் ஏற்றுக்கொள்ளும் உடன்பாடேயாகும் என்றும் தேரர்கள் குறிப்பிட்டனர்.

ஆகவே, யுத்தத்தை உடனடியாக நிறுத்தவும், அனைத்துத் தரப்பு மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நீதியான முறையில் அரசமைப்பைச் சீரமைக்கவும் மக்கள் தமது பிரதிநிதிகளை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் வகையில் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்வது அனைத்துக் கட்சிகள் மற்றும் அதன் தலைவர்களின் பொறுப்பாகும் என்றும் மகா நாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(உ-ஒ)

### பொலீஸாருக்கு விருது வழங்கி கௌரவிப்பு

கொழும்பு.ஜூலை10

மானிப்பாயப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானது என நம்பப்படும் ஆயுதக்கிடங்கு ஒன்றை கண்டுபிடித்த பொலீஸாருக்குப் பதவி உயர்வுகளும், விருதுகளும் வழங்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தப் பொலீஸாரைப் பாராட்டி விருது வழங்கும் நிகழ்வு பொலீஸ் மாஅதிபர் லக்கி கொடித்துவக்கு தலைமையில் நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்றது.

கைவிடப்பட்டிருந்த வீடு ஒன்றில் அமைந்திருந்த இந்தக் கிடங்கை மானிப்பாய்ப் பொலீஸார் அதிரடி நடவடிக்கை ஒன்றின் மூலம் கண்டு பிடித்தனர் எனவும் -

இந்த ஆயுதங்களின் பெறுமதி ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவுக்கும் அதிகமானது எனவும் -

ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-4)



நேற்றுக் காலை இடம்பெற்ற யாழ். மேலதிக அமர்வு நீதிமன்ற அங்குரார்ப்பண வைபவத்தில் மேலதிக நீதிவானாக நியமனம் பெற்றுள்ள திருமதி சரோஜினி இளங்கோவன் யாழ்.நீதிவான் ஆர்.ரீ.விக்னராஜா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்த சமயம் எடுக்கப்பட்ட படம். மூத்த சட்டத்தரணி எஸ்.கனகரத்தினம் அருகில் அமர்ந்திருக்கின்றார்.

படம்: கொனிகா கலர்லாப்

## யாழ்ப்பாணத்தில் மேலதிக அமர்வு நீதிமன்றம் நேற்று இயங்க ஆரம்பித்தது

யாழ்ப்பாணத்தில் மேலதிக அமர்வு நீதிமன்றம் நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

மேலதிக மாவட்ட நீதிவானாக நியமனம் பெற்றுள்ள பிரபல சட்டத்தரணியான திருமதி சரோஜினி இளங்கோவனுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்து யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்ற அமர்வை ஆரம்பித்துவைத்தார்.

யாழ்.நீதிமன்றத்தின் மேல் மாடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேலதிக நதிமன்றத்தின் ஆரம்ப வைபவத்தில் சட்டத்தரணிகள் நீதிமன்ற ஊழியர்கள் பங்குபற்றினர்.

பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு, மேலதிக மாவட்டப் பதிவாளர் ந. சதாசிவஐயர், மூத்த சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(உ-3-10-173)

## திவ்வியன் கைது குறித்து படைத்தரப்பு அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் கைது செய்யப்பட்டது தொடர்பாக பலாலியில் இருந்து யாழ்.பாதுகாப்புத் தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பிரிவின் மாணவனான 25 வயதுடைய எஸ்.கிருஷ்ணசாமி திவ்வியன் என்ற மாணவன் உரப்பையினுள் ரி 81 ரகத் துப்பாக்கியை மறைத்து எடுத்துச்சென்றசமயம் பாதுகாப்புப் படையினர் கடந்த 2001.07.02 ஆம் திகதி கோண்டாவில் பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் இவருடன் சென்ற புலிகள் இயக்கத்தின் கைத்துப்பாக்கிப் பிரிவைச் சேர்ந்த தலைவரான சசி என்பவர் தப்பிச் சென்றுள்ளார். படையினரால் கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவன் புலிகள் இயக்கத்தின் கைத்துப்பாக்கிப் பிரிவைச் சேர்ந்தவர் என ஒப்புக்கொண்டுள்ளதுடன், அந்த மாணவன் வழங்கிய தகவலின்படி பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட ரி 81 ரகத் துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் - 102, ஆர்.பி.ஜி. எறிகணை செலுத்தும் துப்பாக்கி - ஒன்று, கைத்துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் - 40, குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கு உபயோகிக்கப்படும் வயர் - 3அடி, வாகனமொன்று, கணனி இயந்திரம், கணனி அச்சு பதிப்பு இயந்திரம் - இரண்டு, போட்டோக் கொப்பி இயந்திரம் ஒன்று, மின் உற்பத்தி இயந்திரம் (ஜெனரேட்டர்) - ஒன்று என்பனவற்றையும் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த நாள்களுக்குள் இந்தக் கைத்துப்பாக்கிப் பிரிவினர் யாழ். நகரத்துக்குள் பொதுமக்களிடமிருந்து நிதி சேகரித்தல், காயமடையும் பயங்கரவாத உறுப்பினர்களுக்குப் பல்கலைக்கழகத்தில் வைத்து சிகிச்சை அளித்தல், ஆயுதங்களைப் பல்கலைக்கழக வளாகத்திலும், வெளியிடங்களிலும் சேகரித்து வைத்தல், பல்கலைக்கழக மாணவர்களைப் புதிதாகப் புலிகள் இயக்க உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். மேலும் பயங்கரவாத அமைப்புக் கெதிராகச் செயற்பட்ட அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக இவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த வகையில் பயங்கரவாதச் செயலுடன் தொடர்புள்ள பல்கலைக்கழக மாணவனை இராணுவத்தினர் கைது செய்துள்ளதை எதிர்த்து, யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது பகிஷ்கரிப்புப் போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

ஆனால் இந்தப் பயங்கரவாதச் சந்தேகநபரைப் பார்ப்பதற்கு யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் விஞ்ஞான பீடத்தின் முக்கியஸ்தர் உட்பட விஞ்ஞான பீட மாணவர்கள் நான்கு பேருக்கு படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். இவர்கள் முன்னிலையில் தான் பயங்கரவாதக் குற்றச் செயலில் ஈடுபட்டதாக அவர் தெளிவாகக் கூறியுள்ளார். இதனால் பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்படும் பகிஷ்கரிப்புப் போராட்டங்களை கைவிடுவதற்கு ஒழுங்கு செய்துதருவதாக இந்தக் குழுவினர் பாதுகாப்புப் படையினரிடம் உறுதி அளித்துள்ளார்கள். இருப்பினும் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதால் 2001.07.09ஆம் திகதி யாழ். பாதுகாப்புத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியின் தலைமையில் விசேட கலந்துரையாடல் பலாலி தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பல்கலைக்கழகத் துணைவேந்தர், விரிவுரையாளர் மற்றும் மாணவ ஒன்றியத்தின் சிரேஷ்ட மாணவர்கள் நால்வரும் கலந்துகொண்டனர். மேற்படி மாணவன் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறித்துத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளதால், இவரது விடுதலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என தலைமையகக் கட்டளை அதிகாரி பல்கலைக்கழக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதுடன், மேலும் பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய சமூக மாணவர்களிடம் கேட்டுள்ளார். ஆனால் இந்த விடயம் தொடர்பாக சகல பீட மாணவர்களையும் சந்தித்துவிட்டுப் பதில் கூறுவதாக மாணவ ஒன்றிய உறுப்பினர்கள் கட்டளை அதிகாரிகளிடம் தெரிவித்தார்கள்.

இந்தப் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாகவும் பல்கலைக்கழக மாணவனின் கைது குறித்தும் உண்மைக்கு மாறான பல்வேறு தகவல்கள், தொடர்பு சாதனங்கள் மூலமாக வெளியிடப்படுவதால் இந்த உண்மையான தகவலைத் தங்களது பத்திரிகையில் பிரசுரிக்க அனுப்பியுள்ளோம் என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றோம்.

ஆகவே இது போன்ற அசாதாரணமான போராட்டங்களில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களைத் தவறான வழியில் அனுப்புவதற்கு இடமளிக்காதீர்கள் என யாழ். பாதுகாப்புக் கட்டளை அதிகாரி பெற்றோர்களிடமும் ஆசிரியர்களிடமும் கேட்டுள்ளார்..

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## திவ்வியனை விடுவிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குக!

### மாவை சேனாதிராசா கோரிக்கை

கொழும்பு,ஜூலை10

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் திவ்வியன் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதால், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மட்டுமல்லாது பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் மத்தியிலும் குழப்பநிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.

இந்தக் குழப்பநிலையைத் தவிர்ப்பதற்காக திவ்வியனை உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள அவசர கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 2ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்த மாணவனை விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எனத் தெரிவித்து அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய கைதுகள் நீண்டகாலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த மாணவன் கைது செய்யப்பட்டதை அடுத்து கடந்த ஏழு தினங்களாக பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாகப் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன.

பிரஸ்தாப மாணவனான திவ்வியன் மாணவர் ஒன்றியச் செயலாளராக இருந்த சமயம் மாணவர்களுக்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் அரிய சேவையாற்றியுள்ளார். தென்மராட்சியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த சமயம் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கினார்.

அநீதிக்கும், அச்சுறுத்தல்களுக்கும், அவமானப்படுத்தல்களுக்கும் எதிராகக் குரலெழுப்புபவர்களை புலிகளின் ஆதரவாளர்கள் என 'சீல்' குத்தும் நடவடிக்கை தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றது.

திவ்வியன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு ஆதாரமற்றது. எனவே மாணவர் மத்தியில் குழப்ப நிலையைத் தவிர்ப்பதற்காக உடன் அவரை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்கவும் -

இப்படிக் கேட்கப்பட்டுள்ளது.

### விபத்தில் சிறுவர் காயம்

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய சமயம் ஏற்பட்ட விபத்தில் இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இருவரும் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது கரியரில் இருந்து சென்ற சிறுவனின் கால் ஒன்று சைக்கிள் சில்லுக்குள் அகப்பட்டதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. குப்பிளான் தெற்குப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களான சோ.ஜீவதாஸ் (வயது 16) சோ.ஜீவானந்தன் (வயது13) ஆகியோர் காயமடைந்தனர். (உ-4)

### காயமடைந்தோர் புலிகளாம்!

கொழும்பு,ஜூலை10

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள திருகோணமலை, கதிரவெளிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் பயணித்த மூன்று டிராக்டர்கள்மீது படையினர் கிளைமோர் தாக்குதல் நடத்தியதாகவும் -

இந்தத் தாக்குதலில் இரண்டாவதாகச் சென்ற டிராக்டர் சேதமடைந்ததாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று முற்பகல் வெளியிட்ட களநிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக விடுதலைப் புலிகளின் பூரணகட்டுப்பாட்டில் உள்ள கதிரவெளி - கட்டுமுறிவுக்குளம் வீதியில் - களநிலைவர அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அதேநாளில் - விசேட அதிரடிப்படையின் ஊடுருவித்தாக்கும் அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் டிராக்டரில் பயணம் செய்த நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்ததாக சுயாதீனசெய்திகள் வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

(உ-ஒ)

### மெய்வன்மை போட்டி

தென்மராட்சி,ஜூலை10

துன்னாலை வடக்கு வசந்தம் முன்பள்ளி மழலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் நேற்று முன்தினம் தாமரைக்குளத்தடி மைதானத்தில் திருமதி பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றன.

(3-117)

## ஆளும் கட்சி, ஐ.தே.கவைச் சேர்ந்த இருபது சிரேஷ்ட அரசியல்வாதிகளின் தொலைபேசி உரையாடல் ஒற்றுக்கேட்கப்படுகிறது


### அவர்களைக் கண்காணிக்க விசேட குழுவும் நியமனம்

கொழும்பு,ஜூலை10

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐதே.கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 20 சிரேஷ்ட அரசியல்வாதிகளின் தொலைபேசி உரையாடல் ஒற்றுக்கேட்கப்படுவதாகத் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முக்கிய பிரேரணைகள் மூலம் அரசைக் கவிழ்த்துவிடலாம் என்ற எண்ணத்துடன் சில அரசியல்வாதிகள் சூழ்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் -

இதனால் இவ்வாறு செய்யப்படுவோரின் தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்கும் தேவை ஏற்பட்டுள்ளது என்றும் - அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இருபது அரசியல்வாதிகளினதும் நடமாட்டங்களை அவதானிக்க விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு அது இரகசியமாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-7)



பிரிட்டனில் உள்ள 'ஷப்பிள்குரொஸ்' அணு நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை சிறிய விபத்து ஒன்று இடம்பெற்றதாக அறிவிக்கப் பட்டது. எனினும் இந்த விபத்தால் கதிர்வீச்சுத் தாக்கங்கள் ஏற்பட வில்லை என்றும் பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லை என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது. விபத்து நடந்த அணுநிலையத்தைப் படத்தில் காணலாம்.

## காஷ்மீர் மோதலில் 27 தீவிரவாதிகள் பலி!

ஸ்ரீநகர்,ஜூலை10

ஜம்மு காஷ்மீரில் கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்ற மோதல்க ளில் 27 பேர் கொல்லப்பட்டனர்.

காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகளை, இந்தியப் படையி னர் தடுக்க முயன்றபோது ஏற்பட்ட மோதல்களிலேயே இவர்கள் கொல் லப்பட்டனர்.

## சவூதியில் சிரச்சேதம்

ரியாத்,ஜூலை10

சவூதிஅரேபியாவில் சிறுவன் ஒரு வனைக் கடத்திச் சென்று பாலியல் வன்முறைக்குட்படுத்திய குற்றத்துக் காக நஸார் அல் கலேடி என்ற நபர் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

இந்த வருடத்தில் இவருடன் சேர்த்து சவூதிஅரேபியாவில் இஸ் லாமிய சட்டப்படி 53 பேருக்குச் சிரச சேதம் செய்யப்பட்டுள்ளது.



பலஸ்தீனத்தில் மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை பதினொரு வயதேயான றபா என்ற பலஸ்தீனச் சிறுவன் ஒருவன் இஸ்ரேலிய-பலஸ்தீனிய எல்லையில் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். அவனது சடலத்தின் மீது விழுந்து கதறியழும் அவனது தாயைப் படத்தில் காணலாம். றபா இறுதிக்கிரியைகளில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் கலந்து கொண்டனர்.

# ஆட்சி மாற்றம் தொடர்பாக பங்களாதேஷில் பதற்றம்

## தலைநகரில் எதிர்க்கட்சியினர் குவிக்கின்றனர்

டாக்கா,ஜூலை10

பங்களாதேஷில் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தவார இறுதியில் ஆட் சியை காபந்து அரசிடம் ஒப்படைக்க உள்ள நிலையில், தலைநகர் டாக் காவை ஸ்தம்பிக்கச் செய்ய எதிர்க் கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதனால நாடுமுழுவதும் பெரும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான அவாமி லீக் உட்பட எதிர்க்கட்சிகளின் ஆயி ரக்கணக்கான ஆதரவாளர்கள் தலை நகர் டாக்காவில் நேற்றுமுதல் கூடி வருகின்றனர். பிரதமர் ஹசீனாவின் அரசாங்கம் ஆட்சியிலிருந்து வெளி யேறும் வரை டாக்கா வீதிகளை ஸ்தம்பிக்கச் செய்வதே எதிர்க்கட்சி களின் திட்டமாகும்.

அதேசமயம் -

"தாக்கப்பட்டால் திருப்பித் தாக் குங்கள்" என்று பிரதமர் ஹசீனா தனது கட்சித் தொண்டர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனால் தலைநகரில் பெரும் வன் முறைகள் வெடிக்கும் அபாயம் ஏற் பட்டுள்ளது. நகரம் அதிஉச்ச பதற்ற நிலையில் காணப்படுவதாக நேற்று மதியம் கிடைத்த ஏஜென்ஸி செய்தி கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சித் தலைவி பேகம் காலிதா ஸியா தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணி விடுத்த 'டாக்கா சலோ' (டாக்காவுக்குப் போ) என்ற அழைப்பை ஏற்று ஆயி ரக்கணக்கான தொண்டர்கள் டாக் காவில் குவிந்தவண்ணம் உள்ளனர்.

இதற்கிடையில் -

உலக அரங்கில்

ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பிரதமர் ஷேக ஹசீனா காபந்து அரசிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைப்பாரா? அல் லது எதிர்கட்சிகளின் கோரிக்கைப் படி இன்னும் ஓரிருதினங்களில் கட்சி சார்பற்ற அரசு ஒன்றை பங்களாதேஷ் அதிபர் நியமிப்பாரா? என்பது குறித்து தெளிவற்ற நிலை இருப்பதாக ஏஜென் ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

# பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவி

## வெளியேறிச் செல்லும் அமெ. தூதர் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,ஜூலை10

பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் காஷ்மீரில் தீவிரவாதிகளின் செயற் பாடுகளுக்கு ஆதரவு வழங்கி வரு கின்றன.

- இவ்வாறு பதவிக்காலம் முடிந்து வெளியேறிச் செல்லும் பாகிஸ்தானுக் கான அமெரிக்கத் தூதுவர் வில்லி யம் பி.மிலட் குற்றஞ்சாட்டி உள்ளார்.

தீவிரவாதிகளுக்கு உதவும் பாகிஸ் தானின் இத்தகைய கொள்கை குறித்து இஸ்லாமாபாத்துக்கும் வாஷிங்ரனுக்கும் இடையில் ஏற்பட் டுள்ள கருத்து முரண்பாடுகளால் இரு நாட்டு உறவுகளிலும் நீண்ட நாள் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் சுட் டிக் காட்டியுள்ளார்.

தலிபான் ஆட்சியாளர்களுக்கும் பாகிஸ்தானின் பழைமை வாதிகளுக் கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்றும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ம-4)

# விம்பிள்டன் டெனிஸில் வீனஸ் வில்லியம் வெற்றி

லண்டன்,ஜூலை10

விம்பிள்டன் டெனிஸின் மகளிர் ஒற்றையர் போட்டியில் அமெரிக்காவின் 21 வயதான கறுப்பின வீராங்கனை வீனஸ் வில்லியம் இரண்டாவது தட வையாக வெற்றி பெற்றுள்ளார்.

அவர் தன்னை எதிர்த்து ஆடிய பெல்ஜியத்தைச் சேர்ந்த ஜெஸ்ரின் ஹெனினை 6-1, 3-6, 6-0 என்ற 'செட்' கணக்கில் தோற்கடித்தார். இந்த வெற்றி வீனஸ் வில்லியம் பெறும் மூன்றாவது 'கிராண்ஸ்லாம்' வெற்றியா கும். அவரை எதிர்த்து ஆடிய ஜெஸ்ரின் ஹெனினே விம்பிள்டன் போட்டிக ளில் இறுதியாட்டம் வரை முன்னேறிய ஒரேயொரு பெல்ஜியம் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனின் புற்தரை ஆடுகளங்களில் ஆடப்படும் விம்பிள்டன் போட்டி களே உலகின் முதற்தர டெனிஸ் போட்டிகளாகக் கருதப்பட்டுவருகின்றன. (ம)

# பிரிட்டன் கலவரங்கள் குறித்து உள்ளூர் மக்கள் கடும் விசனம்

## தேசிய முன்னணி மீது குற்றச்சாட்டு

லண்டன்,ஜூலை10

பிரிட்டனின் பிறாட்போர்ட் நக ரில் சனியன்று இடம்பெற்ற இனக் கலவரங்கள் குறித்து உள்ளூர் வெள்ளையின மக்கள் கடும் சீற்ற மடைந்துள்ளனர். இந்தக் கலவரத்துக்கு வலதுசாரிக் கட்சியான தேசிய முன்ன ணியின் ஆதரவாளர்களே காரணம் என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்ற னர்.

"எமது நகருக்கு வெளியே இருந்து வந்த தேசிய முன்னணியின் ஆதர வாளர்களே இந்தக் கலவரங்கள் எல் லாவற்றுக்கும் காரணம். அவர்கள் பிறாட்போர்ட்டுக்குள் வருவதை நாம் விரும்பவில்லை. இங்கு இனங்களுக்கு இடையில் சரியான புரிந்துணர்வு இருக் கின்றது. நாங்கள் ஆசிய மக்களு டன் நல்ல உறவுகளையே பேணி வரு கின்றோம். அவர்கள் அமைதியாகவே இருந்தனர். நகருக்கு வெளியே இருந்து வந்தவர்களே கலவரத்தைத தூண்டினர். இதற்குக் காரணமான தேசிய முன்னணியின் ஆட்களைத் தான் சுட்டுத்தள்ள வேண்டும்."

- இவ்வாறு தெரிவித்தார் பிறாட் போர்ட் நகரில் வாழும் பெண் ஒருவர்.

இதேவேளை மனிங்ஹாம் போன்ற பகுதிகளில் அரசு போதிய அபிவி ருத்தித் திட்டங்களில் ஈடுபடுவதில்லை என்று கருதும் அப்பகுதி வெள்ளை யின இளைஞர்களே தமது ஆத்தி ரத்தை இவ்வாறு சிறுபான்மையினர் மீது காட்டுகின்றனர் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

# கலவரங்கள் தொடர்பாக 36 இளைஞர்கள் கைது

லண்டன்,ஜூலை10

பிரிட்டன் பிறாட்போர்ட் நகரில் சனியன்று இடம்பெற்ற இனக்கல வரங்கள் தொடர்பாக ஆசிய மற்றும் வெள்ளை இனங்களைச் சேர்ந்த 36 இளைஞர்களைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கலவரம் காரணமாக 120 பொலீஸ் அதிகாரிகள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிறாட்போர்ட் நகரில் தொடர்ந்தும் பெரும் பதற்றம் நிலவி வருகின்றது.

8 கோடி 70 லட்சம் சனத்தொகை யைக் கொண்ட பிரிட்டனில் 43 லட் சத்து 50 ஆயிரம் பேர் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள். பிறாட் போர்ட்டில் வாழும் 4 லட்சத்து 82 ஆயிரம் பேரில் 72 ஆயிரத்து 300 பேர் சிறுபான்மையினர் என்பது குறிப் பிடத்தக்கது. இவர்களில் பெரும் பான்மையானோர் பங்களாதேஷ் மற் றும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். (ம)

## பரம வைரிகள் போல் செயற்பட்ட

# அழகிரி - ஸ்டாலினை இணைத்த கருணாநிதியின் கைதுச் சம்பவம்

சென்னை,ஜூலை10

தமிழக முன்னாள் முதல்வரும், தி.மு.க. தலை வருமான கருணாநிதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட சம்பவம், அவரது குடும்பத்தினரை மீண்டும் ஒன்று சேர்த்துள்ளது.



குறிப்பாகச் சகோதரர்களாக இருந் தும், பரமவைரிகள் போன்று செயற் பட்ட கருணாநிதியின் புதல்வர்களான மு.க.ஸ்டாலினும், மு.க.அழகிரியும் தற்போது இணைந்துள்ளனர்.

கருணாநிதியின் மறைந்த மனை வியின் புதல்வரான மு.க.அழகிரியும் கருணாநிதியின் மற்றொரு மனைவியான தயாளு அம்மாளின் புதல்வர் மு.க.ஸ்டாலினும் எப்போதும் வைரிகளாகவே இருந்தனர்.

மதுரை தி.மு.கவை தன்னிஷ்டப்படி ஆட்டிவைக்கும் சக்தி பெற்ற அழகிரி, மதுரையில் ஸ்டாலின் ஆதரவா ளர்களை உதாசீனப்படுத்தினார். சென்னை மேயரான மு.க.ஸ்டாலின் தனது பொறுப்பில் உள்ள தி.மு.க. இளை ஞர் அணியில் அழகிரியின் ஆதரவாளர்கள் பதவிகளைப் பெறாமல் பார்த்துக்கொண்டார்.

கடந்த சட்டசபைத் தேர்தலில் முன்னாள் சபாநாயகர் பி.ரி.ஆர்.பழனிவேல்ராஜன் உட்பட மதுரை மாவட்டத் தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர்களுக்கு எதிராக, மு.க.அழகிரி செயற்பட்டதாகவும் கூறப்பட்டது. அந்தச் சமயத்தில் அவர் தி.மு.கவிலிருந்து விலக்கிவைக்கப் பட்டிருந்தார்.



இந்த நிலையில் கருணாநிதி கைதுசெய்யப்பட்ட சமயம், அழகிரி யும், ஸ்டாலினும் கைதாகிச் சிறை யில் அடைக்கப்பட்டிருந்தனர். பின் னர் பிணையில் விடுதலையாகி யுள்ள அவர்கள் தற்போது மிகவும் நெருக்கமாகயுள்ளதாகவும், அடிக்கடி தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்திவருவதாகவும் கூறப்படுகிறது.

இவர்களை மட்டுமன்றி, கருணாநிதி கைது செய் யப்பட்ட சம்பவம், தாமரை இலைத் தண்ணீர் போன்று, பட்டும்படாமலும் பழகிவந்த கருணாநிதியின் மனைவி தயாளுஅம்மாள், அவரது மகள் செல்வி மற்றும் மற் றொரு மனைவி இராஜாத்தி அம்மாள், அவரது மகள் கனிமொழி ஆகியோரையும் நெருக்கமாக உறவாட வைத் துள்ளதை அவதானிக்க முடிகிறது. இவற்றைச் சுட்டிக் காட்டும் தி.மு.கவினர், கருணாநிதிக்கு கெடுதல் செய்வ தாக நினைத்து, ஜெயலலிதா மிகப் பெரிய உதவியைப் புரிந்துள்ளதாகக் கூறிவருகின்றனர். (ஒ)



பிரிட்டனில் சனியன்று இடம்பெற்ற ஆசிய - வெள்ளை இனத்தவர்கள் இடையேயான இனக்கலவரத்தின்போது பிறாட்போர்ட் நகர வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான கார்கள் வன்முறையாளர்களால் அடித்து நொருக்கப்பட்டன. நகர வீதிகளில் நொருங்கிக் கிடக்கும் கார்களையும், சேதமடைந்த வாகனங்கள் மற்றும் குப்பைகளை அகற்றி நகரைத் தூய்மையாக்கும் முயற்சியில் பணியாளர்கள் ஈடுபட்டிருப்பதையும், நகரில் பொலீஸ் வான்களுக்கு முன்பாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதையும் படங்களில் காணலாம்.

# குடாநாட்டில் தென்னை "மைற்ஸ்" நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் விஸ்தரிப்பு

## கிராமசேவையாளர்களிடமும் மருந்தைப் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென்னைகளில் பரவி வரும் ''மைற்ஸ்'' நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்திஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஏற்கனவே ''மைற்ஸ்''நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வகையில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் ''மைற்ஸ்'' நோய் பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சிவகுப்புக்கள் நடத்தப்பட்டதுடன், நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகள் கிராம உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்கள் தென்னைச் செய்கையாளர்களுக்கு மருந்துப் பொருள்களை வழங்குவர்.

''மைற்ஸ்'', கொல்லி மருந்து, தெளிகருவி தேவைப்படுவோர் தந்தமது கிராம உத்தியோகத்தர்கள் மூலமாகவும் —

நல்லூர் கமநல சேவைத் திணைக்களத்தில் இயங்கும் தென்னைப் பிரிவில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

தென்னை அபிவிருத்தி பிராந்திய முகாமையாளர் சி. சிவச்சந்திரனின் வழிப்படுத்தலில் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன — என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

# பாடசாலைகளுக்கு கணிப்பீட்டு மேற்பார்வைக் குழு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். கல்வி வலயத்தின் பாடசாலைகளில் பாடசாலை மட்டக்கணிப்பீட்டை மேற்பார்வை செய்வதற்கு மேற்பார்வைக் குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பாடசாலைகளுக்கு வருகை தரவுள்ளனர்.

குழுவினர் மேற்பார்வை செய்வதற்கு அனைத்துக் கணிப்பீட்டு ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திரு'மதி செ. மகாலிங்கம் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (க-10)

## வடமராட்சி வடக்குப் பிரிவில்

# ஐந்து சனசமூக நிலையங்களை புனரமைக்க ரூ. $4\frac{1}{2}$ லட்சம் நிதி

வடமராட்சி, ஜூலை 10

வடமராட்சி வடக்கு பிரிவில் 5 சனசமூக நிலையங்களைப் புனரமைப்புச் செய்ய 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடத்தனை பொற்பதி சனசமூக நிலைய புனரமைப்புக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் வல்வெட்டித்துறை கொம்மாந்துறை சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு 75 ஆயிரம் ரூபாவும் கெருடாவில் ஸ்ரீசிவசுப்பிரமணிய சனசமூக நிலைய புனரமைப்புக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் பொலிகண்டி மக்கள் படிப்பகத்தின் நூல் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஊறணிகாந்தி சனசமூகநிலையத்திற்கான புத்தகக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளன. (க-173)

# நல்லூர்க் கந்தன் உற்சவ ஏற்பாட்டுக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மாநகரசபை அலுவலகத்தில் ஆணையாளர் இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் இக் கலந்துரையாடலில் சுகாதார வைத்திய அதிகாரி, மாநகரசபையின் அதிகாரிகள், நீர்விநியோகப் பகுதியினர், தொண்டர் அமைப்புகள், சென். ஜோன்ஸ்படைப் பிரிவினர் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை—யாழ். மாநகரசபையின் ஊழியர்களால் ஆலயச் சுற்றாடலைத் துப்புரவு செய்யும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. (க-10)

# நாளை காங்கேசன் முகாம் செல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 10

காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்கு நாளை புதன்கிழமை சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா, உணவு மற்றும் கடிதங்களையும் அவர்களிடம் கையளிப்பார்.

உறவினர்கள் நாளை புதன்கிழமை காலை உணவு மற்றும் கடிதங்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (க-10)

# தேர்முட்டிமண்டபம் புனருத்தாரணம்

சுழிபுரம், ஜூலை 10

125வருடபழைமைவாய்ந்த வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேர்முட்டி மண்டப புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மிகவும் பழைய இந்தக் கட்டடம் முதல் முறையாக திருத்தம் செய்யப்படுகிறது. (க-28)

# 15 நீர்ப்பாசனக் குளங்களை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10

உலகஉணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு 15 சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இந்தப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நடவடிக்கைக்கென 300 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் விரைவில் இங்கு எடுத்து வரப்படவுள்ளன. இந்த மாத இறுதியில் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் ஊடாக இவற்றை எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 200 மனித வலுக்களில் 15 குளங்களும் புனரமைக்கப்பட வேண்டும். உணவுப் பொருள்கள் எடுத்து வரப்பட்டதும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் என்று கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே. சுந்தரேசன் தெரிவித்தார். புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுவோருக்கு உணவுப் பொருள்கள் மட்டுமே வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புனரமைப்புச் செய்யப்படவுள்ள 15 குளங்களின் விவரம் வருமாறு:-

பொன்னாலைக் குளம் (சங்கானை), மானிப்பாய் பெரிய குளம் (உடுவில்), சுதுமலைக் குளம் (சண்டிலிப்பாய்), பொக்கணைக்குளம் (சண்டிலிப்பாய்), உப்புவயல்குளம் (சங்கானை) —

பிராட்சிகுளம்(கரவெட்டி), ஒந்திராய்குளம் (கரவெட்டி), வரக்கம்பிராய் குளம் (கோப்பாய்), அம்மன் குளம் — வேளக்குளம் (கோப்பாய்), கட்டாப்பிராய் குளம் (கோப்பாய்) —

கிளுவானை வாய்க்கால் (காரைநகர்), காக்கையன் குளம் (நெடுந்தீவு), வேலணைப் பெரிய குளம் (வேலணை), பளுநானை வாய்க்கால் (வரணி), தம்பனைக்குளம் (வரணி). (க-10)

# இறுதிக்கட்ட குடிசன மதிப்பீடு யுத்தப் பிரதேசங்களில் இல்லை

## திணைக்களப் பணிப்பாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிக்கட்ட குடிசன மதிப்பீடுகள் யுத்தப் பிரதேசங்களில் நடைபெறமாட்டா என குடிசன மதிப்பீட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ஏ.ஜி.டபிள்யூ. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆரம்பப் புள்ளிவிவரக் கணிப்பீடுகள் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. இதில் எமக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படவில்லை. ஆனாலும் எதிர்வரும் 17 ஆம் திகதி மேற்கொள்ளப்படும் இறுதிக்கணிப்பீடுகளைச் சில பகுதிகளில் தவிர்ப்பதென முடிவு செய்திருக்கிறோம்.

மே மாத முடிவு வரையில் ஆரம்பப்புள்ளிவிபரக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் எமக்கு எதுவித சிரமங்களும் ஏற்படவில்லை. (க-7)

# தும்பளை நேசக சிறார்களுக்கு சத்துணவு

வடமராட்சி, ஜூலை 10

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு தும்பளை நேசகத்தில் தங்கியுள்ள 50 ஏழைச் சிறார்களுக்கு நேற்று முதல் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

மெதடிஸ்த திருச்சபையால் வழங்கப்பட்டு வரும் சத்துணவுத் திட்டத்தை பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபைப் போதகர் வண. எஸ். சதீஷ் ஆரம்பித்து வைத்தார். (க-173)

# ஆலயங்களில் ஒலிபெருக்கிகளால் மாணவர் சிரமம்

தென்மராட்சி, ஜூலை 10

ஆலய உற்சவங்களில் ஒலிபெருக்கிகள் இரவு பகலாகப் பயன்படுத்துவதால் பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சை மற்றும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகப் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

அத்துடன் வீடுகளில் நடைபெறும் விழாக்களிலும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்துவதால் அயலவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாக நேரிடுகிறது. (க-117)

# நந்தாவிலில் புதிய இராணுவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொக்குவில் நந்தாவில் அம்மன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள வீட்டில் கடந்த வாரம் தொடக்கம் படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்து தங்கியுள்ளனர்.

இந்த ஆலயத்தின் முன்பாகச் செல்லும் பழைய ரயில் பாதையை தார் வீதியாக அமைக்கும் பணியில் நல்லூர் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது. இந்த வீதி ஊடாக பொதுமக்களின் நடமாட்டம் தற்போது அதிகரித்துள்ளது. இராணுவத்தினர் இந்த வீதியை மையமாக வைத்தே புதிய இராணுவ முகாமை அமைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-6)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜூலை 10

நல்லூர்ப் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் சனசமூக நிலையங்கள் இடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 9 வீரர்கள் பங்குபற்றும் — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் —

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.15 மணி முதல் யாழ். கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

★ திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையம் எதிர் கோண்டாவில் வளர்பிறை சனசமூக நிலையம்.

★ கொக்குவில் கலைமகள் சனசமூக நிலையம் எதிர் கொக்குவில் நேதாஜி சனசமூக நிலையம்.

★ கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் எதிர் கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையம். (க-86)

# தொலைந்த கடவுச் சீட்டுக்கான தண்டம் மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூலை 10

காணாமற் போகும் அல்லது தவறவிடப்படும் கடவுச் சீட்டுக்கு (பாஸ்போர்ட்) தற்போது செலுத்தப்படும் தண்டப்பணம் விரைவில் மேலும் அதிகரிக்கப்படவுள்ளது என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது ஒருவர் காணாமற் போன தனது கடவுச் சீட்டுக்குப் பதிலாக புதிதாக ஒரு கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கும் போது 10 ஆயிரம் ரூபாவைத் தண்டப் பணமாகச்செலுத்த வேண்டும். ஆரம்பத்தில் காணாமற் போகும் கடவுச் சீட்டுக்குப் பதிலாக புதிதாக ஒன்றைப் பெறுவதற்கு ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்தப்பட்டு வந்தது.

கடந்த வரவு — செலவுத் திட்டத்தின் போது இந்தத் தண்டப்பணம் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு உயர்த்தப்பட்ட தண்டப்பணத்தை மேலும் அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலை குடிவரவு — குடியகல்வுத் திணைக்களத்துக்கு ஏற்பட்டுள்ளது.

காணாமற் போகும் கடவுச்சீட்டுக்கள் தொடர்பாகப் பல்வேறு தகவல்களைத் திணைக்களம் திரட்டியுள்ளது.

சில கடவுச்சீட்டுகள் காணாமற்போனது என்று கூறித் துஷ்பிரயோகம் செய்யப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிலர் தமது கடவுச்சீட்டு இருக்கும்போது அது காணாமற்போய்விட்டது என்று புதிதாக ஒன்றைப் பெறுகின்றமையும் தெரிய வந்துள்ளது. இவ்வாறானவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சட்டத்தின் பிடியில் சிக்கியுள்ளனர்.

சில நாடுகளில் வெளிநாட்டவர்கள் குறிப்பிட்ட காலம் வரையும் மட்டுமே தங்க அனுமதிக்கப்படுகின்றனர். பின்னர் அந்த நாட்டுக்கு எக்காரணம் கொண்டும் மீண்டும் செல்லமுடியாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவர்கள் தமது கடவுச்சீட்டு காணாமற்போய் விட்டதாகக் கூறி புதியது ஒன்றைப் பெற்றுக்கொண்டு அந்த நாட்டுக்குள் முதன்முதலாகச் செல்வது போன்று நடிக்கின்றனர்.

இதனால் ஒருவர் தனது பெயரில் இரண்டு கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தும் சட்டவிரோதச் செயல்கள் சர்வதேசரீதியில் சட்டப்பிரச்சினைக்கு உள்ளாகின்றன. இதனால் உண்மையாகவே தமது கடவுச்சீட்டை இழந்தவர்கள் இந்தச் சட்டத்தினால் தங்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

எப்படியிருந்தாலும், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தனது சட்ட நடைமுறைகளை அமுல் செய்வதில் உறுதியாகவே உள்ளது.

அதனால் காணாமல் போன கடவுச்சீட்டுக்கு அறவிடப்படும் தண்டப் பணத்தை மேலும் அதிகரிக்கவே வாய்ப்பு உள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க)

உதயன்

## நிலத்தடி நீரைப் பேணுவோம்!

சூழல் குழப்பம் பற்றிய அபாய எச்சரிக்கை - அதிர்ச்சித் தகவல் - ஒன்று வெளியாகி இருக்கின்றது.

குடாநாட்டில் பல இடங்களிலும் நன்னீர்க் கிணறுகள் பல உவர் நீர்க் கிணறுகளாக மாறிவருகின்றன என் பதுதான் அந்த அதிர்ச்சித் தகவல்.

குறுகியகாலப் பகுதிக்குள் அராலிப் பகுதியில் மட்டும் சுமார் 24 நன்னீர்க் கிணறுகள் உவர்நீர்க் கிணறுகளாக மாறியிருக்கின்றன என்றும் -

இதேபோன்று ஏனைய பகுதிகளில் உள்ள பல நன்னீர்க் கிணறுகளும் படிப்படியாக உவர்த்தன்மை அடைந்து வருகின்றன என்றும் -

மிக அண்மையில் வலி.மேற்கில் நடத்தப்பட்ட நன்னீர்க் கிணறுகள் தொடாபான கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாநகர சபைப் பிரதேசத்திலும் - சுண்டிக்குளி, நாயன்மார்கட்டு போன்ற பகுதிகளில் இதேபோன்ற பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் -

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இந்த ஆபத்து அவதானிக்கப்பட்டு இருப்பதாகவும் -

குடாநாட்டில் பரவலாகக் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களைச் செயற்படுத்திவரும் ஜேர்மன் தொழில் நுட்பப் பிரிவின் (ஜீ.ரீ.இசற்றின்) வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நயினாதீவு, புங்குடுதீவுப் பகுதிகளில் இந்த அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை அங்குள்ள நன்னீர்க் கிணறுகள் உவர் நீராக மாறியுள்ளதால் நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்.குடாநாடு பெரும்பாலும் - ஆனையிறவு என்ற சிறிய நிலத் தொடுப்புப் பகுதியைத் தவிர்த்துப் பார்த்தால் - ஒரு தீவு போன்று கடலினால் சூழப்பட்ட ஒரு பிரதேசமாகவே உள்ளது. இதனால் குடாநாட்டின் பெரும்பகுதியில் - குறிப்பாகக் கரையோரப் பகுதிகளில் - கிணறுகளில் உவர்நீர்த்தன்மை காணப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

ஆனாலும் இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு குடாநாட்டின் நன்னீர் வளத்தைப் பேணி, அதனை மூலதனமாக வைத்துத்தான் நமது மூதாதையர்கள் இங்கு செழிப்பான விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர். ஆனால் இப்போது வெளியாகியிருக்கும் தகவல்கள், எமது விவசாய வளத்துக்கே ஆப்பு வைப்பதாக அமைந்திருப்பது பேரதிர்ச்சி தருகின்றது.

குறைவான மழை வீழ்ச்சி, கடும் வரட்சி, நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் கூடுதலான நீரை இறைத்தல் போன்றவையே இந்தக் கேடு நிலைக்கு முக்கிய காரணம் என்று கூறப்பட்டாலும்கூட, அதற்கு அப்பாலும் சில விடயங்கள் உள்ளன.

சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப கமத்தொழில் பெருக்கமும், நீர்ப்பாவனை என்பனவும் அதிகரித்துச் செல்கின்றன. நிலத்தடி நீர்ப் பாவனை அதிகரிக்கின்ற போதிலும் மழை நீரை நிலத்தடி நீராகச் சேகரிக்கும் முயற்சியில் நாம் பாராமுகமாக இருந்துவிட்டோம் என்பதே உண்மை.

கடும்வரட்சி, மழைவீழ்ச்சி குறைவு என்ற காரணங்கள் உண்மையாக இருக்கலாம். ஆனால் பெய்த மழையை நிலத்தடி நீராகச் சேமிக்க என்ன திட்டத்தை நாம் கையாண்டோம்? மழை நீர் வெள்ளமாக ஓடிக் கடலில் கலக்க முதல், அதனை நிலத்துக்கடியில் சேகரிக்கக் கூடியதாக எத்தனை குளங்களை, கேணிகளை நாம் வெட்டினோம்? தூர் எடுத்து, துப்புரவு செய்து பேணினோம்?

இது விடயத்தில் அரசியல் கலப்புக்கு அப்பால் நின்று பார்த்தால் சில உள்ளூராட்சி சபைகள் முயற்சி எடுத்திருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். என்றாலும் கூட குளத்தைத் துப்புரவு செய்கிறோம் என்ற பெயரில் உள்ளூராட்சி சபைகளின் கஜானாவைத் துப்புரவு செய்யும் பணியும் ஆங்காங்கே நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் இல்லாமல் இல்லை.

தற்போது ஏற்பட்டுவரும் இந்தச் சூழல் பாதிப்புக் குறித்து உரிய மட்டத்தில் ஆய்வு நடத்தி, பாதிப்புக்கான காரணத்தைக் கண்டறிந்து, அதிலிருந்து விடுபடுவதற்கான வழிவகைகளைத் தயாரித்து, செயற்படுத்த வேண்டிய கட்டாயப் பொறுப்பு எம்மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நிர்வாகிகள் கவனம் எடுத்து மேற்கொள்ள வேண்டிய பணி இது.

மழை காலங்களில் தகனக்கிரியைக்கு வசதியாக

# வழுக்கையாறு இந்து மயானத்தில் கொட்டகை அமைக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜூலை10

சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனக்கிரியைகளை மேற்கொள்ள வசதியாகக் கொட்டகை ஒன்றை அமைத்துத் தருமாறு சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கம் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

மழைக் காலங்களில் இந்த மயானத்தில் சடலங்களைத் தகனஞ் செய்வதற்கு மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் -

மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் அமைக்கப்பட்டிருப்பதைப் போல இந்த மயானத்திலும் தகரக் கொட்டகை ஒன்றை நிறுவித் தருமாறும் -

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

இந்த மயானத்தில் உள்ள தங்கும் மண்டபத்தைப் புனரமைத்துத் தருமாறும் இக்கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது - என்று சங்கத்தின் தலைவர் நா.ஜெயரஞ்சிதன் தெரிவித்தார். (ம-135)

## வீதியோரத்தில் மரம் நடுகை திட்டம்

வடமராட்சி கிழக்கு,ஜூலை10

பருத்தித்துறை - மருதங்கேணி வீதியோரத்தில் மரம் நடுகைத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும், விவசாயத் திணைக்கள அதிகாரிகளும் அண்மையில் சந்தித்து இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது பற்றிக் கலந்துரையாடி உள்ளனர்.

பருத்தித்துறை - மருதங்கேணி வீதியோரத்தில் புளி, வேம்பு ஆகிய மரங்களை 40 அடிக்கு ஒன்றாக மந்திகை தொடக்கம் அம்பன் வரை - நடுவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஐ-182)

# நாட்டு நடப்பு

## போதை - I

கொட்டிலில் என்னடி அமளி
குமாரசாமியர் கோவிச்சுக்கொண்டு போறார்?
இட்டப்படி இனிக் கள்ளு
இந்தக் கோப்றேசனில் கிடையாதாம்
பட்ட பகல் புதுக் கள்ளு
பெடியளுக் கொதுக்கி வீட்டாச்சாம்
கிட்டக் கிடலைக்கும் புதுக்கள்
கிழடு கட்டைக்கு இனிக்கிடையாதாம்.

*- விகடகவி -*

# புலிகளின் முக்கிய நிபந்தனைகளை ஏற்று இலங்கை அரசு பேச்சுக்கு முன்வரவேண்டும்

## ஆஸ்திரேலியத் தமிழ் அமைப்புகள் கோரிக்கை

சிட்னி,ஜூலை10

சமாதானப் பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனைகளை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு பேச்சுக்களுக்கு முன்வர வேண்டும்.

ஆஸ்திரேலியாவில உள்ள தமிழ் அமைப்புகள் ஒன்றுகூடி இலங்கை அரசை இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளன.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவும் நோக்குடன் ஆஸ்திரேலியாவில் செயற்படும் அரசசார்பற்ற தமிழ்க் குழுக்கள், சங்கங்கள், அமைப்புகள் ஒன்றுகூடி கடந்த மூன்றாம் திகதி அங்கு மாநாடு ஒன்றை நடத்தின.

இந்த மாநாட்டில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் விதித்துள்ள முன்நிபந்தனைகளான காலவரையறையற்ற யுத்த நிறுத்தம், அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குதல், புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்குதல் ஆகியவற்றை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் -

புலிகளின் கோரிக்கை ஏற்கப்பட்டால் மட்டுமே சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாக வழியேற்படும் என்றும் - தீமானிக்கப்பட்டது.

ஈழத்தமிழ்ச் சங்கம், தமிழ் மருத்துவ உதவிக்கான சங்கம், தமிழ் குடியியல் நிலையம், தமிழ் புகலிடக் கவுன்சில், தமிழ் முழக்கம், தமிழ் புனருத்தாரண சங்கம் ஆகியன இந்த மாநாட்டில் கலந்துகொண்ட முக்கிய அமைப்புகளாகும். (க-7)

## மருதங்கேணி விளையாட்டு வீரர் கௌரவிப்பு

வடமராட்சி கிழக்கு, ஜூலை10

மாகாண மெய்வன்மைப் போட்டிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வீரர் ஒருவர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில் இந்த வைபவம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிலிப் ரபாலா வெலிங்ரன் என்ற இந்த வீரருக்கு விளையாட்டு உபகரணங்களையும், ஆயிரம் ரூபா பணத்தையும் மருதங்கேணி உதவி அரச அதிபர் வழங்கிக் கௌரவித்தார்.

செம்பியன்பற்று வடக்கு பிலிப் நேரியார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இந்த வீரர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் இரண்டாவது இடத்தைப்பெற்று மாகாணமட்டத்திலான போட்டிக்குத் தெரிவாகி இருந்தார். (க-182)

புலிகளைத் தோற்கடிக்கும் போர்வையில்

# பயங்கரவாதத் தடைச்சட்டம் மூலம் மக்களின் போராட்டங்களே நசுக்கப்படும்

## ஜே.வி.பியின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை10

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் போர்வையில் அரசு நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் அரசின் செயற்பாடுகளை எதிர்த்து மக்கள் நடத்தும் போராட்டங்களை நசுக்கவே பயன்படும்.

இவ்வாறு அறிவித்துள்ளது ஜே.வி.பி.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருப்பது குறித்து ஜே.வி.பி. நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்தது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாத காரணத்தினால் ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் அரசு உள்ளது. இதனால் மக்களை அடக்கியாளும் நோக்கத்துடன் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரானது என்று கூறப்பட்ட அவசரகாலச் சட்டம் நாடு முழுவதிலும் அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களையும், சமாதானத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டங்களையும் நசுக்கவே பயன்பட்டது.

மின்சார சபை நடத்திய போராட்டம், ரயில்வே திணைக்களம் நடத்திய போராட்டம், பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் நடத்திய போராட்டங்கள் இவ்வாறு நசுக்கப்பட்டவற்றுள் சிலவாகும்.

- என்று அதில் உள்ளது.(க-7)

# ஈழத் தமிழர்களின் ஏற்பாட்டில் லண்டனில் 'பொங்குதமிழ்' நிகழ்வு

லண்டன்,ஜூலை10

ஈழத் தமிழர்களின் ஆதரவுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை லண்டனில் 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்த எழுச்சி நிகழ்வில் சிறப்பம்சமாக கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு ஒன்று வெளியிடப்பட்டது. தொடர்ந்து புஷ்பவனம் குப்புசாமி குழுவினரின் எழுச்சிப்பாடல்களுடன் இசைநிகழ்வும் இடம்பெற்றது.

'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வில் லண்டன் வாழ் தமிழ்மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டு தமது முழு ஆதரவையும் தெரிவித்தனர் என்று லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-6)

## விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை10

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நடத்தும் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு இன்று செவ்வாய்க்கிழமை காலை நவாலி அட்டகிரி முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்குவார்கள் என்று சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்தார். (ம-135)

## வல்லையில் ஈ.பி.டி.பி. அலுவலகம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

வல்வெட்டித்துறை நெடியகாட்டில் கடந்த சனிக்கிழமை ஈ.பி.டி.பி. அமைப்பின் புதிய அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் பருத்தித்துறை அமைப்பாளருமான ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டப் பிரதி அமைப்பாளருமான க.மணிபல்லவராஜன் புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்தார். (ம-173)

### நாளை

ஆனி 27
புதன்கிழமை
திதி: ஷஷ்டி
முழுவதும்
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு 10.42 வரை.
சுபநேரம் : 4.29 - 5.59
ராகுகாலம் : 11.59 - 1.29
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சமூகத்தில் புரட்சி தோன்றும் முன்பு மனிதனின் இதயத்தில் புரட்சி உருவாக வேண்டும்.


### கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2001
## மாதிரி வினாத்தாள் இல. - 3

### பகுதி 1

தரம் 5 நேரம்:- 45 நிமிடம்




1. படத்தில் காட்டப்பட்டுள்ள இயற்கை காட்சி எது எனத் தெரிந்து சரியான விடையின் கீழ் கோடிடுக.
   (i) வீடும் மரமும் (ii) சூரியோதயமும் சந்திரோதயமும்
   (iii) மாலைக்காட்சி (iv) கடற்கரையும் மலைநாடும்
2. படத்தில் காணப்படும் உயிருள்ள பொருள்கள் இரண்டின் மீதும் "பச்சை" நிறம் தீட்டுக.
3. படத்தில் இயற்கை ஒளிமுதலின் நடுவே "S" என எழுதுக.
4. கதவின் இரண்டு பக்கமும் "யன்னல்" என்பதன் ஆங்கிலப் பதத்தின் முதல் எழுத்தை எழுதுக.

☆ **சரியான விடையின் கீழ் கீறிடுக.**

5. படத்திலே படகு ஆனது எந்த அம்புக்குறி காட்டும் திசையில் பயணம் செய்யும் (அம்புக்குறி A, அம்புக்குறி B)
6. கீழ்வருவனவற்றிலே படத்திலுள்ள இயற்கை வளங்களை மட்டும் இனங்கண்டு அடைப்புக்குள் (✓) என அடையாளமிடுக.
   (1) நீர் ( ) (4) படகு ( )
   (2) வீடு ( ) (5) சூரியன் ( )
   (3) மலை ( ) (6) மரம் ( )

☆ **கீழ்வருவனவற்றில் காலைக்காட்சி ஒன்றிலே நீர் காணக்கூடியவற்றை தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

- சூரியன் மேற்குத்திசைக்கு எதிர்த்திசையில் காட்சி தருவான்.
- மாணவர்கள் பாடசாலைவிட்டு வீடு செல்வார்கள்
- தடாகங்களிலே தாமரைப் பூக்கள் மலர்ந்திருக்கும்
- இருளாய் இருந்த இடங்களெல்லாம் ஒளி பெறும்
- உழவர்கள் வீடு திரும்புவார்கள்

7. ..................................................
8. ..................................................
9. ..................................................

☆ **பின்வரும் வசனங்களுக்குப் பொருந்தக்கூடிய விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


10. பாடசாலை மாணர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆசிரியர்களுடன் செல்வது
    (1) திரைப்படம் பார்க்க (2) கல்விச் சுற்றுலாவுக்கு
    (3) மிருகக்காட்சிகாலைக்கு (.................)
11. சிறுவர்கள் ஏன் புகைப்பிடித்தல் கூடாது?
    (1) வயது குறைந்தவர்கள் என்பதால் ஆகும்.
    (2) முதியவர்களே புகைபிடிப்பர் என்பதால் ஆகும்.
    (3) சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் என்பதால் ஆகும். (..............)
12. ஏழைகளுக்கு உதவ வேண்டும். அதற்குக் காரணம்
    (1) அவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள் என்பதனால் ஆகும்.
    (2) நாம் கருணை உடையவர்கள் என்று காட்டிக்கொள்வதற்காகும்.
    (3) நாமும் ஏழைகளாக மாறக் கூடாது என்பதற்காகும். (..............)

☆ **அகிலனும் கோகிலனும் கிளி வளர்க்கிறார்கள். அமலனும் அருணனும் நாய் வளர்க்கிறார்கள். கோகிலனும் அருணனும் பூனை வளர்க்கிறார்கள். இதன்படி சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**


13. கிளியையும், பூனையையும் வளர்ப்பவர் யார்?
    (அகிலன், கோகிலன், அமலன், அருணன்)
14. நாயையும், பூனையையும் வளர்ப்பவர் யார்?
    (அகிலன், கோகிலன், அமலன், அருணன்)

☆ **தரப்பட்ட அமைப்புக்களில் இருந்து தெரிவுசெய்யக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கையையும், முக்கோணிகளின் எண்ணிக்கையையும் பக்கத்திலுள்ள கோட்டில் எழுதுக.**


15. ..........



16. ..............




☆ **பழக்கடை ஒன்றிலுள்ள 480 பழங்களின் விவரத்தை கீழே உள்ள அமைப்பு காட்டுகிறது. அதனை அவதானித்து சரியான விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.**




17. மிகக் கூடுதலாக உள்ள பழம் எது? ......................
18. மிகக் குறைவாக உள்ள பழம் எது? ......................
19. எப்பழங்கள் சம அளவில் காணப்படுகின்றன?
    ...................... ......................
20. கடையிலுள்ள தோடம்பழங்கள் எத்தனை? ......................


☆ **கீழ்வரும் வினாக்களில் எழுத்துக்களின் அமைவிற்கேற்ப வித்தியாசமான உருவின் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

21.




(1) (2) (3) (4) (...................)


22.




(1) (2) (3) (4) (...................)

☆ **கீழ்வரும் வினாக்களில் முதலாவது படத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புடைய படத்தை ஏனைய நான்கு படங்களிலிருந்தும் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

23.



1 2 3 4 (...................)

24



1 2 3 4 (...................)

☆ **கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்குமுரிய விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

25. 15 பயணிகளைக் கொண்ட பேருந்தின் சில்லுகளின் எண்ணிக்கை 6 ஆகும். இதே பேருந்தில் 30 பேர் பயணம் செய்தால் பேருந்தில் இருக்கும் சில்லுகளின் எண்ணிக்கை யாது?
    (1) 6 (2) 12 (3) 8 (4) 10 (..............)
26. எந்த மூன்று இலக்கங்களையும் கூட்டினாலும் சரி பெருக்கினாலும் ஒரே விடைதான் வரும்?
    (1) 2,4,3 (2) 1,2,4 (3)1,2,3 (4)10,2,5 (..............)
27. ஒரு விளையாட்டுக் கார் ஒவ்வொரு 6 மணித்தியாலங்களுக்கும் 3 மின்கலங்களை பயன்படுத்துகின்றது. மின்கலங்கள் ஒரு பைக்கற்றில் 4 வீதம் விற்கப்படுகின்றன. அந்தக் கார் 48 மணித்தியாலங்களுக்கு ஓடுவதற்கு எத்தனை பைக்கற் மின்கலங்கள் தேவை?
    (1) 6 (2) 8 (3) 18 (4) 24 (..............)

☆ **இலக்கம் 28 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் குழம்பியுள்ளன. அவற்றை எந்த ஒழுங்கில் எழுதினால் கருத்துள்ள வாக்கியம் அமையும் எனத் தெரிந்து அவற்றின் இலக்கங்களை ஒழுங்கு முறையில் எழுதுக.**

உ+ம்: 1. வெட்டி 2. இளநீர்
3. குடித்தனர் 4.குரும்பைகளை (4,1,2,3)


28. 1. மருத்துநீர் 2. வந்தாள்
    3. கண்மணி 4. வாங்கி (..............)
29. 1. உடையார் 2. அடையார்
    3. முயற்சி 4. இகழ்ச்சி (..............)
30. 1. ஓடியது 2. பூனை
    3. வெள்ளைப் 4. விரைந்து (..............)

☆ **பின்வரும் வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

31. ஓடிக் கொண்டிருக்கும் பஸ் வண்டியில் எப்பொழுதும்
    (1) பரிசோதகர் இருப்பார் (2) நடத்துநர் இருப்பார்
    (3) பிரயாணி இருப்பார் (4) சாரதி இருப்பார் (..............)
32. ஒரு வயலில் எப்போதும் காணக்கூடியது
    (1) நீர் (2) பயிர் (3) மண் (4) கமக்காரன் (..............)
33. ஒருவரது சிறுவயது நிகழ்ச்சியைக் கொண்டு அவரது பிற்கால உயர்ச்சியைத் தெரிந்துகொள்ளலாம் என்பதைக் குறிக்கும் பழமொழி.
    (1) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
    (2) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
    (3) விளையும் பயிரை முளையில் தெரியும்.
    (4) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். (..............)
34. பாட்டி என்பது
    (1) அம்மாவின் தாயாரைக் குறிக்கும்.
    (2) அப்பாவின் தாயாரைக் குறிக்கும்.
    (3) மாமாவின் தாயாரைக் குறிக்கும்.
    (4) அம்மாவினதோ அல்லது அப்பாவினதோ தாயாரைக் குறிக்கும். (..............)


☆ **வெற்றிடத்தில் வரவேண்டிய கோலத்திற்கு ஏற்ப கண்டுபிடி டுக.**

35.





(1) 7 (2) 5 (3) 11

36.




(1) 30 (2) 33 (3) 42

☆ **சிறுவன் ஒருவன் பாடசாலை பாதை படத்தில் காட்டப்பட் அதன்கீழ் உள்ள வினாக்கள துக.**



37. சிறுவன் எத்திசையை நோ (..........
38. சிறுவன் வலது கைப்பக்க னான்? (..........
39. சிறுவன் எத்தனை தடவை திசை நோக்கித்திரும்பி நட
40. சிறுவன் இடதுகைப் பக்கமா (..........

பு

☆ **கீழ்வரும் சம்பவத்தைக் கவ பட்டுள்ள வினாக்களுக்குரிய துக.**

தன்னைப் பத்து மாதம் சும செய்தியைத் தொலைபேசி மிகுந்த கவலை அடைந்தா அங்கிருந்து விமானம் மூலம் விமான நிலையத்தில் இருந் யிரத நிலையத்தை அடைந் மலைக்கு சென்றான். திரு ஒன்றின் மூலம் யாழ்ப்பாண இறங்கிப் பேருந்து ஒன்றின் மூ பின் அங்கிருந்து துவிச்சக் வீடு வந்து அடைந்தான்.

1. சுந்தர் பயணம் செய்த தை களை எழுதுக. ..................
   ..................
2. பந்தியில் குறிப்பிடப்பட்ட
   ..................
3. இறுதியாகப் பயணம் செய் வலுவின் மூலம் இயங்கும்?

☆ **ஒத்த கருத்துள்ள சொற்கள**

4. கவலை - ......................

☆ **எதிர்க்கருத்துள்ள சொற்கள**

6. இறந்த - ......................

☆ **பன்மைச் சொற்களை எழுது**

8. வீடு - ......................
10. கப்பல்கள் வந்து தங்குமிட
    ......................

☆ **கீழே தரப்பட்டுள்ள ஒவ்வெ சொல்லை எழுதுக.**

11. பந்து - ......................
13. தாய் - ......................


☆ **செந்தாளன் கடைக்குச் செ பொருள்களை வாங்கினான். எது.**

சீனி - 5 கிலோக்கிராம்
சவர்க்காரம் - 1/2 டசின்
தேங்காய் எண்ணெய்- 2
பெற்றோல் - 250 மில்லிலீ


**இவற்றினைப் பயன்படுத்தி பி யினை புள்ளிக் கோட்டில் எ**

15. வாங்கிய பொருள்களில் எழுதுக. (1) ..............
16. திரவ வடிவில் வாங்கிய
    (I) ......................
17. அழுக்ககற்றியாக பாவிப்ப
    ......................
18. பின்வருவனவற்றின் குறி
    1. கிலோக்கிராம் - ..........
    3. கிராம் - ..........
19. கடையில் வாங்கி சீனியின்

ண்டிய எண்ணைத் தரப்பட்டுள்ள எண்
ண்டுபிடித்து சரியான விடையின் கீழ்க் கோடி





(3) 11




) 42

சாலையிலிருந்து தன் வீட்டிற்குச் செல்லும்
ட்டப்பட்டுள்ளது. இதனை அவதானித்து
னாக்களுக்குரிய சரியான விடையினை எழு




ப நோக்கி பயணத்தை ஆரம்பித்தான்?
(.......................................................)
ப்பக்கமாக எத்தனை தடவை திரும்பி
.......................................................)
தடவை தான் வந்த வழியான மேற்குத்
பி நடந்திருப்பான்? (.......................)
க்கமாக எத்தனை தடவை திரும்பினான்?
(.......................................................)

**பகுதி 3**

**நேரம்:- 1மணி 15 நிமிடம்**

**க் கவனமாக வாசித்து அதன் கீழ் தரப்**
**க்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழு**

தம் சுமந்து பெற்றெடுத்த தாய் இறந்த
லபேசி மூலம் கேட்டு அறிந்த சுந்தர்
டந்தான். வெளிநாட்டில் இருந்த சுந்தர்
மூலம் கொழும்பில் வந்து இறங்கினான்.
இருந்து மோட்டார் வண்டிமூலம் புகை
அடைந்து புகைவண்டி மூலம் திருகோண
. திருகோணமலையிலிருந்து கப்பல்
ப்பயணம் வந்தான். கப்பலில் இருந்து
ன்றின் மூலம் யாழ்நகரத்தை அடைந்தான்.
விச்சக்கரவண்டி ஒன்றின் மூலம் தனது
ான்.

த தரைமார்க்க போக்குவரத்து சாதனங்
.......................................................
ட்ட தொலைபேசி எவ்வகை சாதனம்?
.......................................................
செய்த போக்குவரத்துச் சாதனம் எவ்
ங்கும்?
ற்களை எழுதுக.
...... 5. மாதம் - ........................
ற்களை எழுதுக.
.... 7. பின் - ........................
எழுதுக.
9. செய்தியை - ........................
ங்குமிடம் எவ்வாறு அழைக்கப்படும்?
.......................................................

**ஒவ்வொரு சொல்லுக்குமான ஆங்கிலச்**

12. கப்பல் - ........................
14. துவிச்சக்கரவண்டி - ........................

**ச் சென்று வீட்டுக்குத் தேவையான சில**
**னான். அவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்**

| | |
|---|---|
| ம் | உப்பு - 1 பைக்கற் |
| சீனி | ஷுவிச்சம்பழம் - 5 |
| - 2 லீற்றர் | பருப்பு - 500 கிராம் |
| ல்லிலீற்றர் | துணி - 2 மீற்றர் |

**த்தி பின்வரும் வினாக்களுக்குரிய விடை**
**ல் எழுதுக.**
ரில் நீரில் கரைவனவற்றின் பெயரை
..... (II) ........................ (III) ........................
திய பொருள்களின் பெயரை எழுதுக.
(II) ........................
விப்பதற்குப் பயன்படும் பொருள் எது?
.......................................................
றியீடுகளை எழுதுக.
.......................... 2. மில்லிலீற்றர் - ........................
.......................... 4. மீற்றர் - ........................
பின் அளவை கிராமில் தருக ........................

20. கடையில் வாங்கிய துணியின் அளவை சென்ரிமீற்றரில் தருக.
.............................
21. 1 கிலோக்கிராம் சீனியின் விலை 42 ரூபா எனின் செந்தாளன் வாங்கிய சீனியின் மொத்த விலை யாது?
.................... ரூபா .................... சதம்
22. 1 கிலோக்கிராம் பருப்பு 65 ரூபா ஆகும். செந்தாளன் வாங்கிய பருப்பின் பெறுமதி எவ்வளவு? .................... ரூபா .................... சதம்
23. 1 மீற்றர் துணி 95 ரூபா வீதமும், 1 டசின் சவர்க்காரம் 142 ரூபா வீதமும் கடையில் விற்பனை செய்யப்பட்டது எனின் இவ்விரண்டு பொருளையும் மேலே உள்ள தேவையான அளவில் வாங்க செந்தாளன் 500 ரூபாவைக் கொடுத்திருந்தால் அவனுக்குக் கிடைத்திருக்கும் மீதிப்பணம் எவ்வளவு? .................... ரூபா .................... சதம்
24. செந்தாளன் தான் வாங்கிய பெற்றோலை 25 மில்லிலீற்றர் கொள்ளளவு உடைய சிறிய போத்தல்களில் அடைத்திருந்தால் எத்தனை போத்தல்கள் தேவைப்பட்டிருக்கும்?
.............................................
25. 1 பைக்கற் உப்பானது 250 கிராம் நிறை உடையது. ஐந்து கிலோக்கிராம் உப்பு தேவைப்படும் ஒருவர் எத்தனை பைக்கற் உப்பை வாங்க வேண்டும்? ....................................

☆ **"தென்னை பனை நடுவோம். நாடும் வளம் பெறும். நாமும் பயன் பெறுவோம்" என்பது துண்டுப்பிரசுரத்தில் காணப்பட்ட ஒரு வாசகமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய விடையை எழுதுக**

26. தென்னை ஆராய்ச்சி நிலையம் எங்கு அமைந்துள்ளது?
.............................................
27. தென்னை, பனை ஆகியன எவ்வேர்த் தொகுதியைக் கொண்ட தாவரங்கள்? ....................................
28. தென்னை இலங்கையின் வர்த்தகப் பயிர்களில் (பணப்பயிர்) ஒன்றாகும். ஏனைய வர்த்தகப் பயிர்கள் இரண்டின் பெயரை எழுதுக? ....................................
29. தென்னை, பனை இவை இரண்டிலும் வைரம் கூடிய மரம் எது? ....................................
30. பனையின் இளமைப் பெயர் யாது? ....................................

☆ **கீழே காட்டப்பட்டுள்ள உபகரணங்கள் ஆற்றும் செயல்கள் எவை என்பதை தரப்பட்டுள்ள விடைகளை தெரிந்து அவற்றுக்குரிய புள்ளிக் கோட்டில் எழுதுக.**


உடைகள் வெட்டுதல், மரம் அறுத்தல், தகரம் வெட்டுதல், ஆணி கழற்றுதல், இரும்பை வெட்டுதல், கல்லுப் புரட்டுதல், மண் வெட்டுதல்

31. 32. 33.



.............................. .............................. ..............................

34. 35. 36.



★ **பின்வரும் பாடல் வரிகள் அழகு, அன்பு, கருணை, வீரம், தேசப்பற்று என்பவற்றை வெளிப்படுத்துகின்றன. அவை வெளிப்படுத்தும் உணர்வினை அப்பாடல்களுக்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

37. காலைத் தூக்கி கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா. ....................................
38. உடலில் உறுதி உடையவரே உலகில் உறுதி உடையவராம். ....................................
39. புள்ளிப் புள்ளி மானே துள்ளித் துள்ளி ஓடிவா. ....................................
40. நண்டின் காலை ஒடிக்காதே நாயைக் கல்லால் அடிக்காதே. ....................................
41. இலங்கை எங்கள் தாய்நிலம் இணையில்லாத எழில் நிலம். ....................................

☆ **கீழே தரப்பட்டுள்ள பரிசோதனை அமைப்பை நன்கு அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**




42. இங்கு பயன்படுத்தப்பட்ட வில்லை வகை எது?
..............................
43. ஒளிப் புள்ளி விழும் இடத்தில் உள்ள பஞ்சுக்கு யாது நடைபெறும்? ..............................
44. இப்பரிசோதனை மூலம் நாம் அடையும் பயன் பின்வருவனவற்றுள் எது எனத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.
(1) சூரிய ஒளி மூலம் மின்குமிழை எரித்தல்.
(2) சூரியனிலிருந்து பெறும் வெப்பத்தால் உணவு சமைக்கலாம்.
(3) சூரிய வெப்பத்தால் மின்சாரத்தைப் பெறலாம்.

☆ **பின்வரும் வசனங்களை ஒரு வாக்கியமாக எழுதுக.**
★ சூரியன் பூமிக்கு வெப்பத்தைத் தருகின்றது.
★ சூரியன் பூமிக்கு வெளிச்சத்தைத் தருகின்றது.

45. .............................................

☆ **பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வசனமாக எழுதுக.**

46 அடி / அம்மியும் / அடித்தால் / நகரும் / அடிக்கு மேல்
.............................................

☆ **கீழ்வருவனவற்றில் பிழையற்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.**
47. வெண்காயம், வெம்காயம், வெங்காயம், வெண்ங்காயம்
48. காலசட்டை, காட்சட்டை, காற்சட்டை, காற்ட்டை

☆ **பின்வரும் உருக்கள் உடற்கல்விப் பாடத்தின் போது மாணவர்களால் செய்து காட்டப்பட்ட நிகழ்வுகள் ஆகும். அவை குறித்து நிற்கும் செயற்பாடுகளை தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து எழுதுக.**

ஒற்றைச் சில்லுவண்டி, கரடி நடை, சீன எழுப்பம், சமநிலையில் நிற்றல்.

49. 50. 51. 52.




.............................. .............................. .............................. ..............................

☆ **பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக**

53. பல்வேறு நிறக்கடதாசிகளைக் கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யும் ஆக்கத்தை எவ்வாறு அழைப்பர்?
.............................................
54. சிறுவர்கள் ஆக்கத் தொழிற்பாட்டில் விளையாட்டு இரட்டைத் தோணி செய்வதற்கு பொருத்தமான உபகரணம் யாது?
.............................................
55. உருவங்கள் செய்வதற்கும், செதுக்குவதன் ஊடாக ஆக்கம் செய்வதற்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குப் பொருத்தமானதும் இலகுவானதுமான ஊடகம் யாது?
.............................................
56. பின்னுதல், இழைத்தல் தொடர்பான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்வதற்குரிய ஆக்கங்களை செய்வதற்குச் செலவில்லாது பெறக்கூடிய ஊடகம் (பொருள்) ஒன்று எழுதுக?
.............................................
57. சிவப்பு நிறத்தையும், மஞ்சள் நிறத்தையும் கலந்து பெறப்படும் புதிய நிறம் யாது?
.............................................

☆ **சிறுவன் ஒருவனின் பயணப் பாதையைப் படம் காட்டுகிறது. அப்பாதையின் விபரிப்பில் விடுபட்ட இடங்களை நிரப்புக**




A இல் இருந்து புறப்பட்ட சிறுவன் (58) ....................... மீற்றர் தூரம் (59) ....................... திசையை நோக்கிச் சென்று Bயை அடைந்தான். பின் அங்கிருந்து (60) ....................... திசையை நோக்கி 3 மீற்றர் தூரம் சென்று Cயை அடைந்து பின் (61) ....................... திசை நோக்கி 5 மீற்றர் தூரம் சென்று Dயை அடைந்து பின் (62) ....................... திசையை நோக்கி 3 மீற்றர் தூரம் சென்று Eயை அடைந்து தனது பயணத்தை முடித்தான்.

☆ **பின்வரும் ஆங்கிலப் பதங்கள் குறிக்கும் தமிழ்ச் சொற்களை எழுதுக.**

63. BALL ....................... 64. BROTHER .......................
65. TREES ....................... 66. EARS .......................

☆ **பின்வருவனவற்றில் சரியான விடையினை எழுதுக.**
67. வானவில் காலையில் எத்திசையில் தோன்றும்?
.............................................
68. புவியீர்ப்பைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
.............................................
69. இலங்கையில் உள்ள மிக நீளமான நதி எது?
.............................................
70. இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எது? .......................
71. இலங்கை மின் உற்பத்திக்குப் பயன்படும் இயற்கை வளம் எது? .......................
72. இலங்கையில் இரத்தினக்கல் பெறும் முக்கிய இடம் எது?
.............................................
73. பூமியின் துணைக்கோள் எது? .......................
74. இலங்கையில் தற்போது பதிவுத் தபாலுக்கான மிகக் குறைந்த கட்டணம் யாது? .......................

☆ **'பழைய குடையின் சுயசரிதை' என்னும் தலைப்பின் கீழ் சரியான ஒழுங்கில் பந்திகளாகவுள்ள ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.**

75. .............................................
76. .............................................
77. .............................................
78. .............................................
79. .............................................
80. .............................................

**தயாரிப்பு:**
**திரு. வேலுப்பிள்ளை அன்பழகன் (ஆசிரியர்)**
**(யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.)**

## வடமராட்சி கிழக்கில் உள்ள 3 பாடசாலைகள், தேவாலயம் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்குப் பகுதியி லுள்ள மூன்று பாடசாலைகளும், தேவாலயம் ஒன்றும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனபிரகாரம் குடத்தனை அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, குடத்தனை அரசின் தமிழ்க் கலவன் பாடசாலை, மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகியவற்றுக்கு தலா இரண்டு லட்சம் ரூபாவும் மணற்காடு புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. (க-173)


## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

மாதகல் புனித தோமையார் ஆலய
புனரமைப்புக்காக நிதியுதவி வழங்கிய
வடக்கு அபிவிருத்தி,
புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கு தமிழ்மொழி
விவகாரங்கள் அமுலாக்கல்,
இந்து கலாசார அமைச்சரும்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிச்
செயலாளர் நாயகமுமான



**மாண்புமிகு கௌரவ**
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்
அமைச்சரின் செயாலாளர் **தோழர் கிருபன்**
அவர்களுக்கும்
நல்லூர் பிரதேச சபைத் தலைவர்
**க.மணிபல்லவராஜன்** J.P.U.M.
அவர்களுக்கும்



மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர்
**வெலிச்சோர்**
**அன்ரன் ஜோண்சன்** J.P.U.M.
அவர்களுக்கும்

எமது உளங்கனிந்த நன்றிகளையும்,
நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

*புனித தோமையார் ஆலயம்,*
*மாதகல்*

***பங்குத்தந்தை,***
***பங்குமக்கள்.***

(89890)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
30
-
02
-
1919



விண்ணில்
11
-
06
-
2001

### அமரர்
### மாரிமுத்து பாலசுப்பிரமணியம்

கண்ணினை இமைகாப்பது போல் எமை
வளர்த்துவிட்டு
கண்ணீர்க் கடலில் மூழ்கவிட்டு
கண்ணெதிரே தோன்றாமல் - நீங்கள்
கண் மறைந்து விட்டீர்களே!

உங்கள் பிரிவால் வருந்தி
உயிரிழந்த உடல்போல் நிற்போம்
என்று எண்ணாமல் எமை வருத்தி விட்டு
எங்கே சென்று மறைந்து விட்டீர்கள்?

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.*
*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டும், தொலைபேசி, கடித மூலம் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (11-07-2001) புதன் கிழமை நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும் மதிய போசனத் திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர் அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

*ஆலடி ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.* (89715)


# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 5ஆம் திகதிவரையும் அனுமதி வழங்கப் பட்டோரின் விவரம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (120204பி) | (179935ஏ) | (184564ஏ) |
| (184564பி) | (184564சி) | (185905ஏ) |
| (189752ஏ) | (193127ஏ) | (193127பி) |
| (193210ஏ) | (193342ஏ) | (193342பி) |
| (193342சி) | (195367ஏ) | (195474ஏ) |
| (195966ஏ) | (195966பி) | (195966சி) |
| (195966டி) | (195966ஈ) | (197245ஏ) |
| (197245பி) | (197245சி) | (197350ஏ) |
| (197350பி) | (197350சி) | (197395ஏ) |
| (197396ஏ) | (197396பி) | (197408ஏ) |
| (197408பி) | (197408சி) | (197451ஏ) |
| (197469ஏ) | (197528ஏ) | (197549ஏ) |
| (197569ஏ) | (197569பி) | (197589சி) |
| (197601ஏ) | (197628ஏ) | (197628பி) |
| (197628சி) | (197628டி) | (197642ஏ) |
| (197643பி) | (197643சி) | (197644ஏ) |
| (197673ஏ) | (197673பி) | (197673சி) |
| (197693ஏ) | (197693பி) | (197693சி) |
| (199014பி) | (199014சி) | (199181ஏ) |
| (199814ஏ) | (199816ஏ) | (199816பி) |
| (199816சி) | (199819ஏ) | (199833ஏ) |
| (199848ஏ) | (199865ஏ) | (199870ஏ) |
| (199895ஏ) | (199899ஏ) | (199899பி) |
| (199917ஏ) | (199917பி) | (199918ஏ) |
| (199918பி) | (199919ஏ) | (199943ஏ) |
| (199945ஏ) | (199945பி) | (199945சி) |
| (199946ஏ) | (199958ஏ) | (199998ஏ) |
| (200024ஏ) | (200024பி) | (200033பி) |
| (200033சி) | (200034ஏ) | (200034பி) |
| (200035ஏ) | (200035பி) | (200035சி) |
| (200044ஏ) | (200053ஏ) | (200062ஏ) |
| (200080ஏ) | (200080பி) | (200105ஏ) |
| (200117ஏ) | (200119ஏ) | (200120ஏ) |
| (200120பி) | (200153ஏ) | (200204ஏ) |
| (200204பி) | (200204சி) | (200204டி) |
| (200225ஏ) | (200225பி) | (200225சி) |
| (200225டி) | (200225ஈ) | (200225எவ்) |
| (200226ஏ) | (200226பி) | (200226சி) |
| (200226டி) | (200226ஈ) | (200227ஏ) |
| (200227பி) | (200227சி) | (200227டி) |
| (200229ஏ) | (200229பி) | (200229சி) |
| (200229டி) | (200229ஈ) | (200229எவ்) |
| (200230ஏ) | (200230பி) | (200230சி) |
| (200230டி) | (200230ஈ) | (200230எவ்) |
| (200231ஏ) | (200231பி) | (200231சி) |
| (200231டி) | (200231ஈ) | (200231எவ்) |
| (200263ஏ) | (200265ஏ) | (200265பி) |
| (200265சி) | (200265டி) | (200283ஏ) |
| (202255ஏ) | (202257ஏ) | (202320ஏ) |
| (202320பி) | (202320சி) | |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (195501ஏ) | (197384ஏ) | (200038ஏ) |
| (200297ஏ) | | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (159392ஏ) | (159392பி) | (159392சி) |
| (159392டி) | (168640ஏ) | (189744ஏ) |
| (195348ஏ) | (195467ஏ) | (195471ஏ) |
| (195573ஏ) | (195573பி) | (197372ஏ) |
| (197372பி) | (197436ஏ) | (197436பி) |
| (197444ஏ) | (197444பி) | (197499ஏ) |
| (197502ஏ) | (197502பி) | (197502சி) |
| (197502டி) | (197548ஏ) | (197548பி) |
| (197632ஏ) | (197632பி) | (197632சி) |
| (197676ஏ) | (197676பி) | (197676சி) |
| (197676டி) | (197676ஈ) | (199392ஏ) |
| (199591ஏ) | (199947ஏ) | (199982ஏ) |
| (199985ஏ) | (199985பி) | (199985சி) |
| (200019ஏ) | (200036ஏ) | (200036பி) |
| (200060ஏ) | (200093ஏ) | (200268ஏ) |
| (200285ஏ) | | |

இம்மாதம் 6 ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (189753ஏ) | (189753பி) | (189753சி) |
| (197600ஏ) | (197600பி) | (199262ஏ) |
| (199618ஏ) | (199618பி) | (199810ஏ) |
| (199811ஏ) | (199811பி) | (199811சி) |
| (199811டி) | (199811ஈ) | (199853ஏ) |
| (199941ஏ) | (200040ஏ) | (200040பி) |
| (200040சி) | (200041ஏ) | (200041பி) |
| (200047ஏ) | (200096ஏ) | (200121ஏ) |
| (200121பி) | (200137ஏ) | (200137பி) |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (195415ஏ) | (199959ஏ) | (199959பி) |
| (200032ஏ) | (200032பி) | (200032சி) |
| (200032டி) | (200066ஏ) | (200134ஏ) |
| (200134பி) | (200134சி) | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (197328ஏ) | (197328பி) | (197568ஏ) |
| (197568பி) | (197568சி) | (197568டி) |
| (199889ஏ) | (200022ஏ) | (200089ஏ) |
| (200127ஏ) | (200127பி) | (200133ஏ) |
| (200133பி) | (200133சி) | (200156ஏ) |
| (200156பி) | (200176ஏ) | (200276ஏ) |
| (200276பி) | (200276சி) | |

இம்மாதம் 7ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோர் விவரம் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (00058பி) | (175605ஏ) | (189134பி) |
| (189134சி) | (189134டி) | (189135ஏ) |
| (189756ஏ) | (189760ஏ) | (189760பி) |
| (189760சி) | (191233ஏ) | (191233பி) |
| (193326ஏ) | (193326பி) | (193475ஏ) |
| (193475பி) | (195195ஏ) | (195195பி) |
| (195597ஏ) | (195597பி) | (197326ஏ) |
| (197371ஏ) | (197496ஏ) | (197496பி) |
| (197615ஏ) | (197615பி) | (197646ஏ) |
| (197646பி) | (197664ஏ) | (197691ஏ) |
| (199824ஏ) | (199824பி) | (199824சி) |
| (199842ஏ) | (199842பி) | (199916ஏ) |
| (199922ஏ) | (199924ஏ) | (199925ஏ) |
| (199933ஏ) | (199934ஏ) | (199936ஏ) |
| (199944ஏ) | (199944பி) | (199944சி) |
| (199944டி) | (199963ஏ) | (199969ஏ) |
| (199984ஏ) | (199984பி) | (200038ஏ) |
| (200038பி) | (200038சி) | (200038டி) |
| (200038ஈ) | (200043ஏ) | (200043பி) |
| (200043சி) | (200043டி) | (200048ஏ) |
| (200058ஏ) | (200064ஏ) | (200071ஏ) |
| (200094ஏ) | (200094பி) | (200145ஏ) |
| (200154ஏ) | (200166ஏ) | (200167ஏ) |
| (200168ஏ) | (200171ஏ) | (200171பி) |
| (200171சி) | (200171டி) | (200171ஈ) |
| (200171எவ்) | (200171ஜி) | (200178ஏ) |
| (200181சி) | (200185ஏ) | (200195ஏ) |
| (200196ஏ) | (200203ஏ) | (200203பி) |
| (200205ஏ) | (200213ஏ) | (200214ஏ) |
| (200220ஏ) | (200220பி) | (200221ஏ) |
| (200239ஏ) | (200239பி) | (200240பி) |
| (200243ஏ) | (200247ஏ) | (200247பி) |
| (200247சி) | (200251ஏ) | (200251பி) |
| (200252சி) | (200262ஏ) | (200262பி) |
| (200262டி) | (200267ஏ) | (200284ஏ) |
| (200284பி) | (200284சி) | (200291ஏ) |
| (200291பி) | (202274ஏ) | (202276ஏ) |
| (202276பி) | (202361ஏ) | (202394ஏ) |
| (202409ஏ) | (202409பி) | (202409சி) |
| (202409டி) | (202409ஈ) | (202444ஏ) |
| (975341ஏ) | (975341பி) | (975341சி) |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (184746ஏ) | (184746பி) | (184746சி) |
| (184746டி) | (184746ஈ) | (195469ஏ) |
| (195469பி) | (200290ஏ) | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (000006சி) | (175550ஏ) | (181753ஏ) |
| (181753பி) | (181753சி) | (185832ஏ) |
| (185832பி) | (185832சி) | (191054ஏ) |
| (191054பி) | (191054சி) | (191102ஏ) |
| (192991ஏ) | (195307ஏ) | (195331ஏ) |
| (195331பி) | (195591ஏ) | (195591பி) |
| (195591சி) | (195710ஏ) | (195720ஏ) |
| (197308ஏ) | (197481ஏ) | (197481பி) |
| (197546ஏ) | (197573ஏ) | (197658ஏ) |
| (199857ஏ) | (199857பி) | (199872ஏ) |
| (199873ஏ) | (199934பி) | (199934சி) |
| (199934டி) | (199934ஈ) | (199962ஏ) |
| (199962பி) | (199964ஏ) | (199971ஏ) |
| (199983ஏ) | (199999ஏ) | (200004ஏ) |
| (200004பி) | (200004சி) | (200006ஏ) |
| (200006பி) | (200011ஏ) | (200011பி) |
| (200023ஏ) | (200069ஏ) | (200069பி) |
| (200069சி) | (200076ஏ) | (200076பி) |
| (200076சி) | (200076டி) | (200080ஏ) |
| (200086சி) | (200086டி) | (200087ஏ) |
| (200087பி) | (200090ஏ) | (200099ஏ) |
| (200100ஏ) | (200106ஏ) | (200124ஏ) |
| (200148ஏ) | (200148பி) | (200150ஏ) |
| (200150பி) | (200159ஏ) | (200161ஏ) |
| (200161பி) | (200164ஏ) | (200169ஏ) |
| (200169பி) | (200180ஏ) | (200182ஏ) |
| (200183ஏ) | (200186ஏ) | (200199ஏ) |
| (200199பி) | (200200ஏ) | (200200பி) |
| (200200சி) | (200200டி) | (200205பி) |
| (200205சி) | (200206ஏ) | (200206பி) |
| (200206சி) | (200206டி) | (200206ஈ) |
| (200211ஏ) | (200211பி) | (200222ஏ) |
| (200236ஏ) | (200236பி) | (200239சி) |
| (200239டி) | (200240ஏ) | (200241ஏ) |
| (200249ஏ) | (200249பி) | (200250ஏ) |
| (200255ஏ) | (200270ஏ) | (200289ஏ) |
| (200289பி) | (200295ஏ) | (200296ஏ) |
| (200296பி) | (200296சி) | (200299ஏ) |
| (200299பி) | (200299சி) | (202293ஏ) |
| (202294ஏ) | (202312ஏ) | (202312பி) |
| (202345ஏ) | | |

(க-4-10)

## தாளையடி மக்கள் மந்திகையில் தபால்களைப் பெறலாம்

வடமராட்சி கிழக்கு,ஜூலை10

தாளையடியிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது மந்திகையில் இயங்கிவரும் உபதபால் நிலையத் தில் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்களுக்குவரும் கடிதங்களை நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என உப தபாலதிபர் தெரிவிக்கின்றார். (க-182)




உ
சிவமயம்

நயினை - தம்பகைப்பதி
**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத**
**ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலயம்**
நயினாதீவு

## இறையருளை வேண்டி வாழ்த்துகிறோம்

நயினை மண்ணின் மைந்தரும்
நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பரம்பரைக் குருவும்
நயினாதீவு - தம்பகைப்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத
ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலய மஹோற்சவ குருவும்
சுதுமலை - ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய நித்தியபூசைக் குருவும் ஆகிய
பிரதிஷ்டா சிரோமணி - கிரியாகலாப முக்தாமணி

**சிவஸ்ரீ சம்பு மஹேஸ்வரக் குருக்கள்** அவர்கள்

**அகில உலக இந்துமத குருபீடாதிபதியாக**

ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டமைக்காக மேற்படி ஆலய அறங்காவலர் சபையினராகிய நாங்கள் ஆலய மகாசபை உறுப்பினர்கள், நயினை மக்கள் சார்பில் குருபீடாதிபதி அவர்கள் நோயற்ற வாழ்வும் - நீடித்த ஆயுளும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகிறோம்.

அறங்காவலர் சபையினர்
*ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத*
*ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலயம், நயினாதீவு.*

(89889)

பாலியல் வன்முறைகளை நியாயப்படுத்தும் தோரணையில் 'திவயின'வில் கட்டுரை

# தமிழ்ப் பெண்கள் தப்புவதற்காகப் படையினர் மீது சுமத்தும் தந்திரமே வல்லுறவுக் குற்றச்சாட்டு!

**புதிய, புதிய திரைப்படங்கள் வெளிவருவதுபோலத் தமிழ்ப் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் பற்றிய தகவல்களும் அடிக்கடி வந்தவண்ணமுள்ளன. ஆனால் கிருஷாந்தி குமாரசாமி பாலியல் தொடர்பான சம்பவமே நீதிமன்றத்தால் நிரூபிக்கப்பட்ட ஒரேயொரு சம்பவம் எனவும் தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்படும்போது அதிலிருந்து தப்பிக்க - ஒரு தந்திரமாகப் படை அதிகாரிகளுடன் தகாத தொடர்புகளை ஏற்படுத்த முயற்சிப்பது ஒரு சாதாரண சம்பவமே எனக் கட்டுரையாளர் கூறுகிறார்.... மருதானைச் சோதனைச்சாவடி பாலியல் வல்லுறவுச் சம்பவம் கிருஷாந்தி குமாரசாமி சம்பவத்துக்கு ஒப்பானது அல்ல; ஆனால் அந்தச் சம்பவத்தின்போது ஏற்பட்ட தவறு அந்தப் பொலீஸார் சீருடையில் இருந்ததே என்கிறார் கட்டுரையாளர் லயனல் முனசிங்க. "திவயின" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் பெண் புலிப் போராளிகள் மீது பாதுகாப்புப் படை அதிகாரிகள் பாலியல் வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுவது உண்மைச் சம்பவங்கள் அல்ல.

இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கிருஷாந்தி குமாரசாமி தொடர்பான சம்பவத்தைத் தவிர நீதிமன்றத்தில் தெளிவாக நிரூபிக்கப்பட்ட வேறெந்த பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பற்றி இதுவரை நாம் கேள்விப்படவில்லை.

இதற்குக் காரணம், இவ்வாறு கைது செய்யப்படும் தமிழ்ப் பெண்கள் தாங்கள் தப்பிப்பதற்காக - ஒரு தந்திரமாக - பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் தகாத தொடர்புகளை ஏற்படுத்த முயற்சிப்பது ஒரு சாதாரண சம்பவம் என்பதாலேயாகும்.

அண்மையில் மருதானை தொழில் நுட்பக் கல்லூரிச் சந்தியில் சோதனைச்சாவடி தொடர்பாக வெளியான தகவல்களும் மேலே கூறப்பட்ட சம்பவங்களை ஒத்ததாகும்.

## தமிழில்: கஜனி

இந்தப் பாலியல் வன்முறைக்கு இலக்கானவர் ஒரு தமிழ்ப் பெண்மணியாவார். அவர் பதுளையைச் சேர்ந்தவர். திருமணமானவர். உணவுச்சாலை ஒன்றில் பணியாற்றுவதாக அவர் பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

சம்பவ தினத்துக்கு முதல் நாள் இரவு சோதனைச் சாவடிக்கு அண்மையில் சென்றுகொண்டிருந்தபோது பொலீஸார் அவரை அழைத்து விசாரித்தபின்னர் அவரைச் செல்ல அனுமதித்தனர்.

இருப்பினும் அவர் மருதானைப் பொலீஸில் மேற்கொண்ட முறைப்பாட்டில் முதல் நாள் இரவு தன்னை விசாரித்த பொலீஸார் மறுநாள் இரவு தான் தங்கியிருந்த விடுதிக்கு வந்து மீண்டும் விசாரணை செய்ய வேண்டும் எனக்கூறித் தன்னைச் சோதனைச் சாவடிக்கு அழைத்துச் சென்று வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

### 6 படையினர் கைது

இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பவ தினத்தன்று குறித்த சோதனைச் சாவடியில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய்கள் மூவர், ரிசேவ் பொலீஸார் மூவர் என அறுவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் சம்பவத்துடன் இருவரே தொடர்புடையவர்கள் என விசாரணைகள் தெரிவிக்கின்றன. இந்த இருவருக்கும் உதவி, ஒத்தாசைகளை வழங்கினார்கள் என்பதே ஏனைய நால்வர் மீதான குற்றச்சாட்டாகும்.

ஆனால் குறித்த பெண் தானாகவே விரும்பி வந்து - விருப்பத்துடனேயே தங்களுடன் தங்கியிருந்துவிட்டுச் சென்றார் எனச் சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ள பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான தகவல்களுக்குக் கடந்தவாரம் தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் முக்கிய இடமளிக்கப்பட்டது.

ஆனால் பொலீஸார் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைத்துள்ளதுடன் குறித்த பெண் விடுதலைப் புலி அமைப்பின் உறுப்பினரா என்பதைத் தெளிவுபடுத்தும் விதத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கிருஷாந்தி குமாரசாமி சம்பவத்தைப்போல் அல்லாது இந்தச் சம்பவத்தில் பொலீஸாரைச் சுற்றவாளிகளாக்கும் முயற்சியில் நாம் ஈடுபடவில்லை. ஆனால் இந்த இரு சம்பவங்களும் ஒன்றையொன்று ஒத்தன எனக் கூறமுடியாது.

### கிருஷாந்தி வல்லுறவு அக்கிரமக்காரரின் செயல்

செல்வி கிருஷாந்தி குமாரசாமி உண்மையில் ஓர் அப்பாவி. பாடசாலைவிட்டு வீடுசென்றுகொண்டிருந்த அவரைச் செம்மணிச் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த அக்கிரமக்காரர்கள் கைதுசெய்து - பாலியல் வன்முறைக்குட்படுத்தி - மனிதாபிமானமற்ற முறையில் படுகொலை செய்தனர். அந்த வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்கள் எப்போது தங்களை மரணம் அழைக்குமெனச் சிறைச்சாலையில் காத்திருக்கின்றனர்.

ஆனால் மருதானைச் சம்பவத்தில் அத்தகைய பயங்கரம் எதுவும் இடம்பெறவில்லை. பொலீஸ் சீருடை அணிந்து அவ்வாறான கீழ்த்தரமான செயலில் ஈடுபட்டதே அவர்கள் மேற்கொண்ட குற்றமாகும்.

அங்குதான் அவர்கள் பாரதூரமான குற்றத்தை இழைத்துள்ளனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவேன் எனச் சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்ட பொலீஸாருக்கு ஒரு பெண்ணால் அனைத்தையும் மறக்க நேரிட்டுள்ளது.

இது பொலீஸ் சேவையிலுள்ள கட்டுப்பாடற்ற தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

ஆனால் இவ்வாறான சம்பவங்களைச் சாட்டாகக் கொண்டு புலி உறுப்பினர்கள் சட்டத்தைத் தவறான வழியில் இட்டுச்செல்ல முயல்கிறார்களா என்பதே பிரச்சினைக்குரிய விடயமாகும்.

கடந்த காலங்களில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட புலிகளின் தற்கொலைப் படைப் பெண உறுப்பினர்கள் தாங்கள் பாதுகாப்புப் படை அதிகாரிகளால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

### திசை திருப்பப்படும் விசாரணைகள்

புலிகள் அமைப்பின் பெண் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் அவர்களை மனித உரிமை அமைப்புகள் பின்தொடர்வது சாதாரண சம்பவமாகும். அந்த மனித உரிமை அமைப்புகள் எழுப்பும் குரல்களூடாக - தன்னியக்கமாக - சந்தேக நபர் மீதான விசாரணைகள் நிறுத்தப்படுகின்றன; அதிகாரிகளிடமிருந்து வாய் முறைப்பாடுகளைப்பெறும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன.

இதனால் விசாரணைகள் வேறு கோணங்களுக்குத் திசை திருப்பப்படுகின்றன. இவ்வாறான சம்பவங்கள் கடந்த காலங்களில் எத்தனையோ இடம்பெற்றுள்ளன. அவையாவும் மனித உரிமைகள் அமைப்புகளுக்குச் சொந்தமான நடவடிக்கைகள் எனக் கூறப்படுகிறது.

சுமார் 400 பேரின் (இறந்தவர்களின்) உக்கிய மண்டையோடுகள் செம்மணியிலுள்ள மனிதப் புதைகுழிக்குள் உள்ளன என உலகெங்கும் ஒப்பாரி வைத்தவர்கள் இந்த மனித உரிமை அமைப்பினர்தான் என்பதைக் கூறவேண்டும்.

மருதானைச் சம்பவத்தை முன்வைத்து சில தமிழ் அரசியல் கட்சிகள் நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்த நடவடிகககை எடுத்து வருகின்றன எனத் தெரியவருகிறது. (இது கடந்த 6ஆம் திகதிக்கு முன்னர் எழுதப்பட்ட கட்டுரை)

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்புகளில் மனித உரிமை அமைப்பும் ஒன்று. நாங்கள் மனித உரிமை அமைப்பின் செயலாளருடன் தொடர்புகொண்டோம்.

அரச பாதுகாப்புப் படைகள் மீது அபகீர்த்தியை உருவாக்கும் எண்ணம் எமக்கில்லை என அவர் முதலில் தெரிவித்தார்.

### மருதானை சம்பவத்தில் 'பயங்கரம்' ஏதுமில்லை சீருடையுடன் இழிசெயல் புரிந்ததே குற்றமாம்

### மன்னார் வல்லுறவு

அவர் மேலும் தெரிவிக்கையில் :-

"அண்மையில் முக்கிய சம்பவமான" - மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட விசாரணைகளை மேற்கொண்டது நாங்கள் அல்ல. அந்த விசாரணைகளை மனித உரிமைகள் தொடர்பான அரச ஆணைக்குழுவே மேற்கொண்டது. நாட்டில் எந்தவொரு படை முகாமுக்கோ, சிறைசாலைக்கோ செல்லும் உரிமை அந்த ஆணைக்குழுவுக்கு உண்டு. அந்த ஆணைக்குழுவுக்கு அரசாங்கமே அதிகாரிகளை நியமிக்கிறது.

"மன்னார் சோதனைச் சாவடியில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படவில்லை என முதலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பின்னர் மருத்துவ அறிக்கைகளின் படி அது ஒப்புக்கொள்ளப்பட்டது.

"விடுதலைப் புலி அமைப்பின் பெண் உறுப்பினர்கள் குண்டுவெடிப்பு சம்பவங்களுடன் அதிகம் தொடர்புடையவர்கள். எனவேதான் விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.

### பெண் அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்

"விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். நாங்கள் அதை எதிர்க்கவில்லை. ஆனால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் பெண்ணை உடனடியாகப் பெண் அதிகாரியிடம ஒப்படைக்கவேண்டும். ஆனால் அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

"மருதானையில் தமிழ்ப் பெண் அவர் தங்கியிருந்த விடுதியில் இருந்தே அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். விசாரணை என்ற போர்வையில் அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அதன்பின்னர் வேறு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதுதான தவறானது. ஆனால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை நாங்கள் எதிர்க்கவில்லை" மனித உரிமை அமைப்பின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அனைவரும் 'அவ்வாறானவர்கள் அல்லர். அதே போலவே அனைத்துப் பெண்களும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களும் அல்லர்.

மனித உரிமை அமைப்பின் செயலாளர் மேலும் தெரிவிக்கையில்:-

இருப்பினும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்படும்போது தாங்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாக மேற்கொள்ளும் குற்றச்சாட்டுகளை மனித உரிமை அமைப்புகளே உலகுக்குத் தெரியப்படுத்துகின்றன. அந்தச் சம்பவங்கள் தொடர்பான உண்மை, பொய் காலங்கடந்த பின்னரே தெரியவருகிறது. சம்பவம் தொடர்பான உண்மை, பொய் தெரிவதற்குள் பாதுகாப்புத்துறையினரின் முகத்தில் கரி பூசப்படுகிறது.

எவ்வாறாயினும் கைது செய்வது என்ற போர்வையில் பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. அவர்கள் சுலபமாக விடுதலைபெறவும் இடமளிக்கக் கூடாது. இவற்றிற்கு இடமளிக்கப்படுமாயின் தமிழ்ப் பெண் என்றோ, சிங்களப் பெண் என்றோ பேதமின்றி பாலியல் வன்முறைகளை மேற்கொள்ள அது வழிவகுக்கும். ★



சங்கானை ப.நோ.கூ.சங்கத்தில் 25 வருடகாலம் சேவையாற்றிய பணியாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக அண்மையில் நடத்தப்பட்ட வெள்ளிவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன், சங்கத் தலைவர் ம.சற்குணசிங்கம், சங்க உப தலைவர் கா.நடராசா மற்றும் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் மேடையில் அமர்ந்துள்ளனர். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

# ஐ.தே. கவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்துவதில் அரசாங்கம் தீவிரம்

## ஞாயிறன்று ஹொரணை, கல்கிசை, வத்தளையில் நடந்தன

கொழும்பு,ஜூலை 10

அரசாங்கத்திற்கு எதிராக ஐ.தே.கட்சியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகவும் அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் மூன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஹொரணை, கல்கிசை, வத்தளை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டுள்ளன.

ஐ.தே.கவின் சதித்திட்டங்களை அம்பலப்படுத்தி அரசாங்கத்தின் பலத்தையும் உறுதிப்பாட்டையும் கட்டிக் காக்கும் வகையில் மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்காக அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்கள் வரிசையில் இந்த மூன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

கல்கிசையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இளைஞர் விவகார அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஹொரணையில் நடைபெற்ற ஐ.தே.க. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அப்பகுதி எம்.பிக்களும் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

வத்தளைச் சந்தியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தொழில் அமைச்சர் அலவி மௌலானா, பிரதி அமைச்சர் நீல் ரூபசிங்க உட்பட இன்னும் பலர் கலந்துகொண்டனர்.

இந்த மூன்று இடங்களிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களிலும் ஆயிரக்கணக்கான அரசாங்க ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

ஐ.தே.கட்சியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை இவர்கள் கண்டித்ததோடு அக்கட்சி பாசிசவாதிகளோடு கூட்டுச் சேர்ந்து நாட்டைக் கூறுபோட முற்படுவதாகவும் குற்றஞ்சாட்டினர். (க)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் மோ.சைக்கிள் மதிலுடன் மோதி சங்கரத்தை இளைஞர் மரணம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிய மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் அதனைச் செலுத்திச்சென்ற இளைஞர் உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டை, மாவடிச் சந்தியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சங்கரத்தையைச் சேர்ந்த முருகையா செல்வகுமார் (வயது 20) என்பவரே பலியானார்.

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சைக்குட்படுத்திய சிலமணி நேரத்தில் அங்கு மரணமானார்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (க-15)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## படிவம்

க.பொ.த (சா/த) பரீட்சை விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி 31.07.2001. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3081 (C/17314)

ஒப்பந்த அடிப்படையில் தபால் சேவை அலுவலர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 45 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட க.பொ.த (உ/த) தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம். (பட்டதாரிகளுக்கு முன்னுரிமை உண்டு) மாதச்சம்பளம் ரூ.5000/= மாதிரிப் படிவத்திற்கு: பாரதி, 430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/17289)

## மணமகள் தேவை

தீவக கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த, தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும், 1975ஆம் ஆண்டில பிறந்த தோஷமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. அரச துறையில் உத்தியோகம் பார்க்கும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். படத்துடனும் மற்றும் விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். வி.இல.1321, மே/பா. உதயன். (89879)

## விற்பனைக்கு

அடையாள அட்டை கவரிடும் இயந்திரம், பக்ஸ் இயந்திரம் இரண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-ராசன் ஐயா, கந்தசாமி கோயிலடி, கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு. (89884)

சுப்பிரமணியர் பண்டிகைக் குரிய விக்கிரகங்களும், பரிவார விநாயகர், வைரவர் பண்டிகைக்குரிய விக்கிரகங்களும் (சுதை விக்கிரகங்கள்) விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. யோகநாதன், பெருமாள் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (89902)

## வீடு தேவை

நாலு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு தேவை. ஆனைக்கோட்டை, கொக்குவில் பகுதியில் விரும்பத்தக்கது. வாடகை கொடுக்கப்படும். தொடர்பு: விள.இல.1323, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (89903)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச பாடசாலையில் நிரந்தர பட்டதாரி ஆசிரியரான, 1969இல் பிறந்த, உத்தர நட்சத்திர, அழகிய மணமகளுக்கு அதே தரத்தில் அல்லது கூடிய அந்தஸ்துடைய அரசாங்க உத்தியோத்து மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இலக்கம்.1322, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (89893)

## தவறிவிட்டது

நடராசா நிலாமலர் என்பவருடைய வி.அ.அ.(இல.0906011213) இணுவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கற்பகப்பிள்ளையார் கோயில், உடுவில், சுன்னாகம் என்னும் முகவரியில் தயவுசெய்து ஒபபடைத்துதவவும். (89876)

திருநெல்வேலியைச் சேர்ந்த தங்கராசா ஸ்ரீ கோணேஷ் என்பவரது தேசிய அ.அ. (இல.621041223V), விசேட அ.அ. (இல.0902027573) என்பன திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆடியபாத வீதி, ஸ்ரீ அம்பாள் தேநீர்க்கடை, திருநெல்வேலி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (89877)

4ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மரியதாஸ் நந்தகோபன் என்பவருடைய தே.அ.அ. (இல.780623292V), விசேட அ.அ. (இல.0905009208) என்பன யாழ் நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் G.S. லிங்கநாதன், இல.13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (89885)

திருநாவுக்கரசு யோகேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.700362035V), வி.அ. அட்டை, 524 பிரிகேட் பாஸ் மற்றும் அலுவலக அ.அட்டை என்பன யாழ்ப்பாணத்துக்கும் நெல்லியடிக்கும் இடையில் கவருடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தி.யோகேந்திரன், பிரதான வீதி, நெல்லியடிச் சந்தி, கரவெட்டி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (89887)

அல்லாரைதெற்கு, மசாலையைச சேர்ந்த பசுபதி தயாநிதி என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 091048689) நெல்லியடிக்கும், கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வடமராட்சி தனியார் சிற்றூர்திச் சங்கத்தில் ஒப்படைத்துதவவும். (89891)

## புறொயிலர் விற்பனைக்கு

சமீரா இன புறொயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு: வி.குணபாகன், 343, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P.No,3353, 609, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (89900)

## வேப்பம் வடகம் தயாரிப்புக்கு ஊக்குவிப்பு

வடமராட்சி கிழக்கில் வேப்பம் மரங்கள் அதிகளவில் காணப்படுவதனால், 'வடகம்' தயாரிக்கும் தொழிலை அப்பகுதியில் ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தொழிலில் அக்கறை காட்டும் பெண்களுக்கான பயிற்சிகள் வழங்குவதற்கு விவசாயத்திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (க-182)

## மீனவர் சங்கத்திற்கு 30 லட்சம் ரூபா

அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் வடமராட்சிப் பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள 300 பேருக்கு சுயதொழில்முயற்சிக்கடன் வழங்கவென 30லட்சம் ரூபாவை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திற்கு வழங்கியுள்ளது. (க-117)

## கரணவாய் இளைஞர் தாக்குண்டு காயம்

வடமராட்சி ,ஜூலை10

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் சிலரால் வழிமறிக்கப்பட்டு பொல்லுகளால் தாக்கப்பட்டு காயங்களுடன் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வதிரி - உடுப்பிட்டி - கரவெட்டி வீதிப்பகுதியில் ஞாயிறு மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் கரணவாய் மத்தியைச் சேர்ந்த பி.ஜெயகரன் (வயது23) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

கோயில் வைபவம் ஒன்றில் ஏற்பட்ட தகராறின் எதிரொலியாகவே இத்தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (க-173)

## நன்றி நவிலல்

நெல்லியடியில் எனது மகள் பிரகாசினியால் தவறவிடப்பட்ட விசேட அடையாள அட்டை, பாஸ் எனபவற்றைக் கண்டெடுத்து என்னிடம் ஒபபடைத்த, புறாப்பொறுக்கி, அரசடி, சுகுணா பல்பொருள் வாணிப உரிமையாளர்

**திரு.க.கார்த்திகேசு**

அவர்களுக்கு

எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

-ஜேம்சன் தேவகுமார்,
*கோட்டப்பளை,*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.*
(89892)

## அவசர கலந்துரையாடல்

**மூன்றாம் வருட முகாமைத்துவ மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று (10.07.2001) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும். மாணவர்கள் தவறாது சமுகமளிக்கவும்.**

**மூன்றாம் வருடப் பிரதிநிதி,**
**முகாமைத்துவத் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**
(89901)

## அறிவித்தல்

**மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.**

**சண்முகரத்தினக்குருக்கள் சிவகடாட்சக்குருக்கள்.**
**வடபத்திரகாளி கோயிலடி,**
**தாவடி தெற்கு, தாவடி.**

**வழ.இல:நம்பிக்கை சொத்து/7** வழக்காளி

எதிராக

1. இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை தாவடி.
2. சின்னவர் அழகக்கோன் பாலசிங்கம் தாவடி.
3. கந்தையா ஞானச்சந்திரன் தாவடி.
4. இரத்தினம் இந்திரதாஸ் தாவடி.
   தாவடி ஸ்ரீ அம்பலவாணர் கந்தசாமி கோயில் பரிபாலனசபை, தாவடி தெற்கு, தாவடி.

இத்திக்கொக்கான் என்னும் ஆதனத்தில் எழுந்தருளிய தாவடி ஸ்ரீ அம்பலவாணர் கந்தசாமி கோயில் சம்பந்தமாக, வழக்கொன்று இந்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் அக்கறையுள்ளோர் எவராவது இருப்பின் ஆவணிமாதம் 2001ஆம் ஆண்டு பதினேழாம் திகதி அன்று மு.ப. 9.30 மணிக்கு அல்லது அன்று வழக்கு கூப்பிடப்படும் பொழுது தாமாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ மன்றில் தோன்றுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

மன்றின் கட்டளைப்படி

**செ.விக்னேஸ்வரமூர்த்தி**
*பதிவாளர்,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*மல்லாகம்.*

வரைவு
இ.வசந்தசேனன்
வழக்காளியின் சட்டத்தரணி. (89899)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக CEFE அலகு மீண்டும் ஒரு முறை உங்களை அழைக்கின்றது.

University of Jaffna

GTZ/Jaffna Rehabilitation Project

Srilanka - German CEFE Program

Department of Industries

Industrial Development Board

**ஏன்?**

- புதிய மிலேனியத்தில் வெற்றிகரமான தொழில் முயற்சியாளராக......
- ஆற்றலுடைய தொழில் முயற்சியாளனே வெற்றிபெற முடியும் என்பதை அனுபவம் மூலம் உறுதிப்படுத்த......
- மாற்றமடையும் பொருளாதார, சந்தைச் சூழல்களுக்கு ஏற்ப திட்டமிட்டுச் செயற்பட உங்களுக்கு வழிகாட்ட.....

**யாரை?**

- ஏற்கனவே தொழில் முயற்சியைக் கொண்டு நடத்திக் கொண்டிருப்பவர்கள் மேலும் வெற்றியை நோக்கி முன்னேற விரும்புவோர்.
- புதிய தொழில் முயற்சியாளராகச் சிறப்படைய விரும்புவோர்.

**ஆதரவளிப்போர்?**

- GTZ/யாழ்ப்பாணப் புனரமைப்புச் செயற்றிட்டம்
- இலங்கை - ஜேர்மன் CEFE நிகழ்ச்சித் திட்டம்.
- தொழிற்றுறைத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாண சபை.
- கைத்தொழில் அபிவிருத்திச் சபை, வடமாகாண அலுவலகம்.

**எட்டாவது பயிற்சிப்பட்டறை**

பயிற்சிக்காலம் : 14 நாள்கள்
பயிற்சிப் பதிவுக் கட்டணம் : ரூ1,000/=
விண்ணப்ப முடிவு திகதி : ஜூலை 25, 2001

**விண்ணப்பப்படிவம் கிடைக்குமிடங்கள்.**

- GTZ/யாழ்ப்பாணப் புனரமைப்புச் செயற்றிட்டம். 11, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
- கைத்தொழில் அபிவிருத்திச் சபை, வடமாகாண அலுவலகம், தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(C/17345)

## 37th DAY REMEMBRANCE



**Dr.M.DURAIRATNAM (D.Sc)**

DIED at LONDON 03-06-2001

(Ret.Professor. University of Rio - Grande do Norte Brazil / Scientific Adviser International Foundation for science,) (Sweden)

Through pain & sorrow we
tresure your memory with
deepest love & gratitude.

CHILDREN JEEVAN &.ARUNTHATHY,
DAUGHTER - IN - LAW, BROTHER,
SISTER, BRO - IN - LAW,
SIS - IN - LAWS & RELATIONS.

*No.8.(28). CLOCK TOWER Rd, JAFFNA.*

*10 APPLETON SQUARE*
*Western Rd Mitcham*
*Surrey CR 4 3SF*
*ENGLAND. TEL: 640621?*

(89897)

# திவ்வியனை உடன் விடுவிக்க துரித நடவடிக்கை எடுங்கள்!

## துணைவேந்தருக்கு வவுனியா வளாக மாணவர் மகஜர்

வவுனியா, ஜூலை 10

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை விடுவிக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையிடம் வவுனியா வளாக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

வளாகத் தலைவர் ஊடாக துணைவேந்தருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவன் கி.திவ்வியன் இம் மாதம் 2 ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இன்று வரை விடுதலை செய்யப்படவில்லை என அறிகின்றோம். கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமிழர்களின் சுய நிர்ணய உரிமை தொடர்பாக எழுச்சி நிகழ்வுகளை நடத்தியும் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தாலும் தமிழ்க் குழுக்களாலும் அநீதி இழைக்கப்படும் போது எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியும் வந்தனர். இது ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் எந்தவொரு குடிமகனுக்கும் உரிய அடிப்படை உரிமையாகும். ஆனால் கடந்த காலங்களில் மாணவர்கள் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்ததற்குப் பழி வாங்குவதற்காகவே இக்கைது நடைபெற்றது என்பதை நிச்சயமாகக் கூற முடியும். இது மாணவர்களாகிய எமக்குத் திகிலை ஏற்படுத்துகின்றது.

மேலும் இம்மாணவன் கைது செய்யப்பட்டவுடன் தாங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. தாமதமாக நீங்கள் மேற்கொண்ட முயற்சி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்நிலை வவுனியா வளாக மாணவர்களாகிய எமக்கும் ஏற்படலாம். அப்போது தங்களையே நாம் நம்பியிருக்க வேண்டியிருக்கும். இம்மாணவன் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருப்பாராயின் மிக மோசமான உடல், உளத் தாக்கத்திற்கு உள்ளாவார். எனவே எதுவித விசாரணையும் இன்றி இம் மாணவனை உடனடியாக விடுதலை செய்யத் தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் இன்றைய அடையாளப் போராட்டம் தொடர்வதற்கான துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

இதற்கு முன்னரும் பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாதச் சாயம் பூசி கைது செய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றனர். இப்படியான துரதிஸ்டமான சம்பவங்கள் எழக்கூடாது. இதற்குத் தாங்கள் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு திவ்வியனை உடனடியாக விடுதலை செய்ய தாங்கள் அரசிற்குக் கொடுக்கும் அழுத்தத்தினை அதிகரிக்கும்படி கேட்டுக் கொள்வதோடு நிர்வாகத்தின் அசமந்தப்போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு ரூ. 5 லட்சத்திற்கு தளபாடங்கள்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிக்கெனத் தொழில்நுட்பக்கல்விப்பயிற்சி திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் 5 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை அடுத்த மாதம் கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்படவுள்ளதாகத் தொழில்நுட்பக்கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் வடக்கு—கிழக்குப் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் என். யோகராஜன் தெரிவித்தார்.

இதேவேளை தொழில்நுட்பக் கல்விப்பயிற்சித் திணைக்களத்தின் வடக்கு—கிழக்கு மாகாணப் பிராந்திய உப அலுவலகத்துக்குக் கணனிகள் மற்றும் தொழிற்கூட உபகரணங்கள், குளிரூட்டிகள் கொள்வனவுக்கென 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-10)

# இருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 10

அல்வாய் மற்றும் யாழ். இராசாவின் தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த இருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் பாலகுலேந்திரன் (வயது 40) என்பவரைக் கடந்த முதலாம் திகதி தொடக்கம் காணவில்லை என்று அவரது மனைவியால் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி இரவு 9.30 மணிக்கு இனந்தெரியாத நபர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் இவர் வீட்டிலிருந்து சென்றதாகவும் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி 52 ஆவது படையணியால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இணைப்பாளர் என். ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த சகாயராசா நியூட்டன் (வயது 17) என்பவரைக் கடந்த மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்று மாலை 5.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர் விவரங்கள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஜூலை 10

வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு 2001 - 2002 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 608 மாணவர்களின் பெயர் விவரங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரால் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பீட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் தமது பதிவுகளை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ள வேண்டும் என்று பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

மருத்துவ பீடத்திற்கு 70 மாணவர்களும் —

விஞ்ஞான பீடத்திற்கு 162 மாணவர்களும் —

விவசாய பீடத்திற்கு 44 மாணவர்களும் —

கலைப் பீடத்திற்கு 178 மாணவர்களும் —

முகாமைத்துவக் கற்கை நெறிக்கு 91 மாணவர்களும்—

வணிக பீடத்திற்கு 63 மாணவர்களும் —

தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர்ப்பட்டியல் அவர்களுக்குரிய பீடங்களின் விளம்பரப் பலகைகளில் இடப்படும் என்று பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

இதேவேளை —

யாழ். பல்கலைக்கழகத்திற்கு மேலும் 290 மாணவர்கள் வரையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களின் பெயர் விவரங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் பதிவாளர் தெரிவித்தார். (ஐ-5)

## அதிபர்கள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நல்லூர் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான ஒன்றுகூடல் நாளை புதன்கிழமை நண்பகல் 12-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ். கல்வி வலய நல்லூர்க்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் கேட்டுள்ளார். (ஐ-9)

# யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா நெறிக்கு மாணவர் அனுமதிப் பரீட்சை

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரு பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்திலும், வன்னிமாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு வவுனியா வளாகத்திலும் பரீட்சை நடைபெறும் என்று யாழ். பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார்.

பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த மாணவர்கள் இதுவரை உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியிருந்தால் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப்பதிவாளர் பரீட்சைக் கிளை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ, உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம் என்ற முகவரிக்கோ அனுப்பிவைத்தால் அவை சரியென உறுதிப் படுத்தப்படும்பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள் எனவும் பதிவாளர் தெரிவித்தார். (க-6)

# வவுனியா சமளன்குளம் பகுதி புளொட் முகாம் மீது தாக்குதல்

வவுனியா, ஜூலை 10

வவுனியா — சமளன்குளம் பகுதியில் அமைந்துள்ள புளொட் அமைப்பின் முகாம் ஒன்று கடந்த சனியன்று இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கானது.

மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக வவுனியாவில் உள்ள புளொட் அமைப்பின் தலைமைச்செயலகம் தெரிவித்தது.

புளொட் உறுப்பினர்கள் பதில் தாக்குதல் நடத்தித் தாக்குதலை முறியடித்து விட்டனர் என்றும்—

இதன்போது தமது தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்றும்— புளொட் அமைப்பு அறிவித்துள்ளது. (க-7)

## கணனி கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 10

பிரபல கணனிப் பயிற்சி நிறுவனமான 'இன்ஸ்ரிரியூட் ஒவ் இன்போமற்றிக் ஸ்ரடீஸ்' (IIS) நிறுவனத்தின் வடமராட்சிக் கிளையினால் நவீன கணனித்தகவல் தொழில் நுட்பத்தின் பரிமாணங்களை எடுத்துக்காட்டும் வகையிலான கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 15ஆம் 16ஆம் 17ஆம் திகதிகளில் காலை 9-00மணி முதல் மாலை7-00மணிவரை இடம் பெறவிருக்கின்றது. (ஐ-3)

## 13 மாணவர்களும் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

ஒருசில மாதங்களுக்கு முன்னர் அத்தியடிப் பகுதியில் சட்டத்தரணி ஒருவரின் வீடு புகுந்து கலகம் விளைவித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ். நகரின் பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த 13 மாணவர்கள் நேற்றுக் காலை நீதிமன்றில் ஆஜராகி இருந்த சமயம் அவர்களைத் தலா 15 ஆயிரம் ரூபா மூன்று வருட நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார். (ஐ-9-10-173)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், ஜூலை 10

பண்ணாகம்—ஆலடி ஞான வைரவர் தேவஸ்தான கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அஸ்டோத்தர சங்காபிஷேகம் நடைபெறும்.

சங்காபிஷேகப் பிரதமகுருவாக பிரம்மஸ்ரீ ச. மு. ரவிக் குருக்கள் கிரியைகளை நிறைவு செய்து வைப்பார். நண்பகல் அன்னதானம் நடைபெறும். (க-28)

★ ★ ★

தென்புலோலி புற்றளை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் பாலஸ்தாபனம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

மூலமூர்த்தியாகிய விநாயகப் பெருமானையும், ஏனைய பரிவார மூர்த்திகளையும் வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சோ. தண்டபாணித்தேசிகர் பாலஸ்தாபனம் செய்து வைப்பார். (க-173)

### நம்பிக்கையில்லாப் பிரேரணை:

# ஆளும் தரப்பினரிடமிருந்து ஜே. வி. பிக்கு மிரட்டல்கள்

## அக்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 10

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க வேண்டாமென தற்போதும் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தம்மை நச்சரித்து வருவதாகவும் — இது தொடர்பாக, மாகாண மட்டத்தில் தமது கட்சியினரை குண்டர்கள் மூலம் அது மிரட்டி வருவதாகவும் — நேற்று முன் தினம் ஜே. வி. பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

சமீபத்திய சம்பவமாக உடுதும்பர ஜே.வி.பி. அமைப்பாளர் துசித வலிசுந்தர மற்றும் கட்சி உறுப்பினரான விஜேரத்ன ஆகியோர் ஹசலக நகரில் கடந்த சனிக்கிழமை குண்டர் கும்பல் ஒன்றால் தாக்கப்பட்டதாகவும்—

'அரசைக் கவிழ்ப்பதற்கான வழிகளும் காரணங்களும்' என்ற தொனிப் பொருளில் நாளை மறுதினம் கண்டியில் ஜே. வி. பி. நடத்த உள்ள பேரணி குறித்த சுவரொட்டிகளை ஒட்டிய போதே அவர்கள் தாக்கப்பட்டதாகவும் ஜே. வி. பி. தெரிவித்துள்ளது.

அத்துடன் சிலாபம் பகுதியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரின் மிரட்டல்களால் அங்கு தமது கட்சி நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளதாக ஜே. வி. பி. கூறியுள்ளது. (ஒ)

## தென்மராட்சி ஓய்வூதியர்களுக்கு

தென்மராட்சி, ஜூலை 10

கொடிகாமம் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறும் கொடிகாமம் பகுதியில் தங்கியுள்ள ஓய்வூதியர்களுக்கு நாளை (11-7) புதன்கிழமை கொடிகாமத்தில் வழங்கப்படுமெனவும்—

நாளை தவிர்ந்த ஏனைய நாள்களில் நெல்லியடியில் உள்ள கிராமிய வங்கியில் ஓய்வூதியம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (3-117)



கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த அமலமரித் தியாகிகள் சபையின் உலகத் தலைவர் பேரருட்திரு.வில்ஹெய்ம் ஸ்ரெக்கிளின் கடந்த சனிக்கிழமை யாழ்.ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள்குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது பேரருட்திரு.ஸ்ரெக்ளின் மற்றும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான ஆணைக்குழுத்தலைவர் டி.ஆர்.அருமைநாயகம், அருட்தந்தை ஏ.ஜ.பேர்னாட், அருட்தந்தை ஜீவா போல், ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் எஸ்.செபநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் அருட்தந்தை ஜே.ஈ.செல்வராஜா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-றோய் மதிவதனன்)

# தேசிய அரசு அமைப்பது குறித்து இனி ஐ.தே.கவுடன் பேச்சு இல்லை

## அரசின் முடிவை அறிவித்தார் பிரதமர்

கொழும்பு,ஜூலை10

தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஐ.தே.கட்சியுடன் இனிமேல் பேச்சு எதுவும் நடத்தப் படமாட்டாது.

இவ்வாறு அரசின் முடிவை அறிவித்திருக்கின்றார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய அரசு ஒன்றை அமைக்கும் யோசனைக்கு ஐ.தே.கட்சி முதலில் ஓரளவு இணக்கம் தெரிவித்திருந்தது. ஆனால் பின்னர் சகல துரும்புச் சீட்டுக்களையும் அது தன்கையில் வைத்திருக்க முயன்றது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

இந்த நடவடிக்கை மூலம் ஐ.தே.கட்சி எமது முதுகில் குத்தி விட்டது. எனவே இத்தகையவர்களுடன் பேச்சு நடத்துவது என்பது முறையற்றதே.

### அரசைக் கவிழ்க்க எவராலும் முடியாது

அரசைக் கவிழ்ப்பதற்காக பல பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் எந்தவொரு சக்தியாலும் அரசைக் கவிழ்க்க முடியாது.

நாம் ஜனநாயகவாதிகள். எனவே ஜனநாயக முறையின் கீழ் ஒருவருடத்திலோ அல்லது அதற்கு முன்போ, பின்போ நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்துவோம். அந்தத் தேர்தலிலும் நாமே வெற்றிபெறுவோம்.

அடுத்தவருடம் ஓகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய மெய்வன்மைப் போட்டிவரைக்கும் இந்த அரசு நிலைத்திருக்குமா? நான் பிரதமராக இருப்பேனா? என்ற சந்தேகமும் எனக்கு உண்டு - என்று பிரதமர் தெரிவித்தார்.

(க-7)


யாழ்.வண்.கிழக்கு, கலட்டி

**எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரியம்மன் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம்**

மேற்படி ஆலய மஹோற்சவம் இன்று (10.07.2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாள்கள் நடைபெறும் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம். அனைவரும் வந்து அம்பிகையைத் தரிசித்து உய்தி பெறுக.

தேர் - 23.07.2001 திங்கட்கிழமை

தீர்த்தம் - 24.07.2001 செவ்வாய்க்கிழமை

*மஹோற்சவ பிரதமகுரு* சிவஸ்ரீ தாணு வாசுதேவக்குருக்கள்

(89904) - மேற்படி தேவஸ்தானம்.



**60 ஆவது நாள் நினைவு அஞ்சலி**

குடமியன் வரணியைச் சேர்ந்தவரும், தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளராகக் கடமை புரிபவருமான

திரு.மு. திவ்வியபாலன் அவர்களின்

அன்புத் தந்தையார்

**வேலுப்பிள்ளை முருகேசு**

அவர்கள் 12.05.2001 இல் அமரத்துவமடைந்ததையிட்டு அன்னாருக்கு எங்கள் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.

(89898)



**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

**பதவி வெற்றிடங்கள்**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*நிர்வாக அலுவலர்:*

சி.பா.த. / க.பொ.த. (சா.த) உடன், அரச திணைக்களம்/கூட்டுத்தாபனம் ஒன்றில் 10 வருடத்துக்குக் குறையாத அனுபவம். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் தேர்ச்சி. கணக்கீட்டில் பரிச்சயம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். ஓய்வுபெற்ற அரச அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 60.

*உப விடுதிக் காப்பாளர்:* (ஆண் -1; பெண் - 1)

* க.பொ.த. (சா/த) வுக்குக் குறையாத கல்வித் தகைமை
* வயதெல்லை 35 - 60
* விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்
* இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும் வழி காட்டுதலிலும் அர்ப்பணிப்போடு ஈடுபட வேண்டும்.

*சமையலாளர்:* (பெண்)

தேகாரோக்கியமும், சுறுசுறுப்பும், பெருமளவில் சமையல் செய்த அனுபவமும் அத்தியாவசியம்.

இல்லத்தில் தங்கக்கூடியவர் முன்னுரிமை பெறுவர். வயதெல்லை. 35 - 55.

**தொழிலாளி:**

இல்லம், பாற்பண்ணை, வீட்டுத்தோட்டம் ஆகியவற்றில் அவ்வப்போது தரப்படும் பணிகளைச் செய்யக்கூடிய உடல்வலுவும், ஆரோக்கியமும் உள்ளவர் விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை 30 - 50.

☆ எல்லாப் பதவிகளுக்கும் தொண்டுதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.

☆ விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதி நாள்: 18.07.2001.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

சோ.பத்மநாதன்
*செயலாளர்.*

(C/17346)


## வல்லை பஸ் நிலைய பயணிகள் தங்குமிடம்

வடமராட்சி,ஜூலை10

வல்வெட்டித்துறை பஸ் நிலையத்தில் பிரயாணிகள் தங்குமிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. சுமார் 4லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வல்வெட்டித்துறை நகரசபையால் இப் பிரயாணிகள் தங்குமிடம் அமைக்கப்படவுள்ளது. (க-173)

## வலி.தெற்குப் பகுதி அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு,ஜூலை10

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மயிலங்காடு கொலனி வீதி, கந்தரோடை தேவரானை வீதி, ஏழாலை மத்தி தச்சர் கடவை வீதி, உடுவில் இராமலிங்கம் வீதி, இணுவில் மத்திய கல்லூரி முன் வீதி, உடுவில் மதுவளை வீதி, இணுவில் துரை வீதியின் கிளை வீதி -

கந்தரோடை ஆசிரியமணி ஆறுமுகம் வீதி, ஏழாலை மேற்கு தம்புலத்தை வைரவர் வீதி, இலங்கையர்கோன் வீதி என்பன இந்நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்படுவதுடன் உடுவில் தெற்கு சித்திவிநாயர் கோயில் கிணறு திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (க-152)

## வாசகர் திருமுகம்

### அராலி வடக்கில் 785 இலக்க பஸ் சேவையால் மாணவர் பெரும்பாடு

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி இறுதி ஆண்டில் கல்வி கற்கும் மாணவியாகிய நான் அராலி வடக்கில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 785 பஸ் சேவை தொடர்பாகப் பின்வருவனவற்றைத் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அராலி வடக்கு ஊடான 785 இலக்க பஸ் காலை 7.45க்கு செட்டியார்மடம் பகுதிக்கு சேவைக்காக வருவதுண்டு. அதன்பின் 11.45க்கு இவ்வழியால் பஸ் சேவை இடம்பெறும். அத்துடன் மினிபஸ் சேவை எதுவும் இப்பகுதியில் இடம்பெறுவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனால் இப்பகுதி மக்கள் பல்வேறு இடங்களுக்கு நடந்து சென்றே யாழ்ப்பாணம் போய்ச் சேரவேண்டியநிலை காணப்படுகிறது. வார இறுதித் தினங்களில் இப்பகுதியில் இருந்து பல்வேறு வகுப்புக்களுக்கும் செல்லும் மாணவ மாணவியர் காலை 7.45 மணி பஸ்ஸிலேயே பயணம் செய்து வருகின்றனர்.

இந்த வகையில் கடந்த மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் அதே மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமையும் 785 இலக்க பஸ்ஸின் காலைச் சேவை இடம்பெறவில்லை. இதனால் 8 மணி வரை தத்தமது தரிப்பிடங்களில் காத்துநின்ற அராலி வடக்கு மாணவ மாணவியர் அனைவரும் அராலிப் பாலத்துக்கு நடந்து சென்று 8.45 மணிக்கு 789 இலக்க பஸ்ஸில் யாழ்ப்பாணம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக எம்மால் முதல் 2 வகுப்புக்களுக்கும் செல்ல முடியவில்லை. இதனால் அந்தந்த வகுப்பு ஆசிரியர்களின் கண்டனத்துக்கு நாம் உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

இச்சம்பவத்தைக் கருத்திற்கொண்டு அதன்பின்னர் பயணிகள் பலர் தமக்கு அயலிலுள்ள தரிப்பிடங்களில் காத்திராமல் அராலிப் பாலத்துக்குச் சிரமம் பாராது நடந்துவந்து 789 அல்லது 785 இலக்க பஸ் மூலமாகவே பயணத்தைத் தொடருகின்றனர்.

எனவே இனிவருங்காலங்களிலாவது மேற்படி பாதையூடான பஸ் சேவை ஒழுங்காக நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

*அராலி.* - எஸ்.செல்வி

### வீதி ஒழுங்குமுறைகளை உதாசீனம் செய்வதால் ஏற்படும் விபத்துக்கள்

வீதி விபத்துக்களினால் குடாநாட்டில் படுகாயமடைபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனை யாழ். ஆஸ்பத்திரி பதிவேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

இதற்குக் காரணங்கள் பல. அதில் ஒன்று, எமது மக்கள் சைக்கிள்களில் செல்கின்ற விதம்!... 5,6 பேர் கூட சமாந்தரமாக வீதியில் பிரயாணம் செய்வதால் அநேக விபத்துக்கள் ஏற்பட ஏதுவாயிருக்கின்றது. அடுத்து, அநேகர் வீதியில் வாகனங்களைச் செலுத்தும்போது அடிப்படை வீதி ஒழுங்குகளைக் கூட உதாசீனம் செய்து நடந்துகொள்வதாலும் அநேக விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இவ் வீதிவிபத்துக்களுக்கு மற்றொரு முக்கிய காரணம் என்னவென்றால்; சில முக்கியமான சந்திகளில் காவலரண்கள் அமைக்கப்பட்டிருக்கும் விதம்!... உதாரணமாக, கோயில் வீதியையும் (Temple Road) பிரதான வீதியையும் இணைக்கும் மூலையிலும், மடத்து வீதியையும் (Convent Road) ஆஸ்பத்திரி வீதியையும் இணைக்கும் மூலையிலும் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் காவலரண்கள் அநேக வீதி விபத்துகளுக்குக் காரணமாய் அமைகின்றன.

மோட்டார் சைக்கிளில் செல்லும் ஒருவர் கோயில் வீதியூடாகச் சென்று பிரதான வீதியில் ஏறும் வரை, பிரதான வீதியால் வரும் வாகனங்களையோ அல்லது பிரதான வீதியால் கோயில் வீதிக்குத் திரும்பும் வாகனங்களையோ இலகுவாகப் பார்க்கமுடியாத அளவில் காவலரண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அவ்வாறே மடத்து வீதியால் வந்து ஆஸ்பத்திரி வீதியின் இடப்பக்கமாகத் திரும்பும் மூலையில் அமைக்கப்பட்டிருக்கும் காவலரணும் விபத்துக்குக் காரணமாய் உள்ளது.

ஏற்கனவே வீதி விபத்துக்கள் பல இவ்விடங்களில் நடந்துள்ளன. கடந்த வாரத்தில் கோயில் வீதிக் காவலரணுக்கு அருகில் இராணுவ வாகனம் அடித்ததில் ஒருவர் படுகாயமடைந்திருக்கின்றார். எனவே, இவ்விடயத்தில் பொதுமக்கள் கவனமாயிருப்பதும், அதிகாரிகள் காவலரண்களை அகற்றுவதில் கவனமெடுப்பதும் பல உயிர்களைக் காக்கும். மக்கள் கவனமாயிருப்பார்களா? அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

*புனித வேளாங்கண்ணி ஆலயம்,*
*யாழ்.ஆஸ்பத்திரி.*

செ.அன்புராசா
(ஆன்மகுரு)

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

## முக்கிய அறிவித்தல்

மாண்புமிகு உயர்கல்வி, தகவல் தொழில்நுட்ப அமைச்சரின் கட்டளைக்கு அமைய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 10.07.2001 முதல் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளது.

விடுதிகளில் உள்ள யாழ்.மாவட்ட மாணவர்கள் தத்தமது விடுதிகளில் இருந்து 11.07.2001 பிற்பகல் 5.00மணிக்கு முன்னதாக வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விடுதிகளில் உள்ள வெளிமாவட்ட மாணவர்களுக்கான ஒழுங்குகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

விடுதியில் இருக்கும் மாணவர்களோ ஏனைய மாணவர்களோ பல்கலைக்கழகக் கல்விசார் துறைக் கட்டடங்களுக்குள்ளோ, நிர்வாகம்சார் கட்டடங்களுக்குள்ளோ, அவை அமைந்திருக்கும் வளவுகளுக்குள்ளோ பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

*யாழ். பல்கலைக்கழகம்.*
*09. 07. 2001.* (C/17356) - துணைவேந்தர்.


# பாலியல் வல்லுறவுச் சம்பவம்: உடன் நடவடிக்கை எடுக்குக!

## அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 10

அல்லாரையில் சனியன்று இரவு வயோதிபத் தாயுடன் வீட்டிலிருந்த 42 வயதுப் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றம் புரிந்தவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணித்திருக்கின்றார் என்று ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இச்சம்பவம் மிலேச்சத்தனமானதும், கண்டிக்கத்தக்கதுமானதும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற அமைச்சர் தமது பிரதிநிதிகளை மீசாலை 52ஆவது படையணித் தளபதியைச் சந்தித்து உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணித்திருந்தார்.

இதற்கமைய, மீசாலை 52 ஆவது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.குலதுங்கவை அமைச்சரின் பிரதிநிதிகளான வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரிலோகநாதன், தென்மராட்சிப் பொறுப்பாளர் சாள்ஸ் ஆகியோர் சந்தித்து, மேற்படி விடயம் சம்பந்தமான விசாரணைகள் எந்தவிதத்திலும் திசை திருப்பாது சுதந்திரமாகவும், நீதியானதாகவும் நடத்தப்பட வேண்டும் எனக் கோரியதோடு, சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வழிகோலவேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

உடனடியாக இராணுவத்தளபதி சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் குடாகெட்டியுடன் தொடர்பு கொண்டு சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிடுவதோடு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அத்தோடு, சம்பவம் நடைபெற்ற இடத்திலுள்ள இராணுவத்தினரை விசாரணை செய்யுமாறும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரிடம் தெரிவித்தார் இதனடிப்படையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

அமைச்சரின் பிரதிநிதிகள் மந்திகை வைத்தியசாலைக்குச் சென்று பாதிக்கப்பட்ட பெண்களை நேரடியாகச் சந்தித்து உரையாடியதோடு இவ்விடயத்தில் தாங்கள் கூடிய கவனம் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்கத் தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.

மனித உரிமை அமைப்புகளும் ஏனை அமைப்புகளும் வடக்கு - கிழக்கில் பாலியல் வல்லுறவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 48 மணி நேரத்திற்குள் இச்சம்பவம் இடம் பெற்றது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னரும் மிருசுவிலில் இடம்பெற்ற படுகொலைகளை வெளியுலகிற்கு கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டு இச்சம்பவத்தை உலகறியச் செய்ய ஈ.பி.டி.பி. மிகத் துரிதமாகச் செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

- என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இன்று சந்திப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதியமைச்சர்களை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது பேச்சு நடத்தப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதியமைச்சர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்போவதாக அண்மையில் செய்திகள் வெளியானதையடுத்தே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-4)

## இரு மீனவரைக் காணவில்லை

மன்னார் சிலாபத்துறையிலிருந்து கடந்த 2ஆம் திகதி மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற தந்தையும் மகனும் நேற்றுவரை கரை திரும்பவில்லை என்று மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

ராஜா மரியசிலுவை (வயது 28), சோதி குரூஸ்(வயது 50) ஆகியோரே காணாமல்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


சிறுப்பிட்டி வடக்கு
கலைவாணி சனசமூக நிலையத்தினர் நடத்தும்
மாபெரும் மாட்டுவண்டில்
சவாரிப்போட்டி

*இடம்* : ஆவரங்கால் சவாரித்திடல்
*காலம* : 15.07.2001 ஞாயிறு பி.ப. 2.00 மணி

*குறிப்பு* :- எமது நுழைவாயில் அனுமதிச்சீட்டில் 22. 07. 2001 என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை 15. 07. 2001 இல் பயன்படுத்தவும்.
(69911) - *செயலாளர்.*



யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் (12.07.2001) வியாழனன்று கல்லூரி மண்டபத்தில் மாலை 3.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் யாழ்.மாவட்டத்திலுள்ள பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்,
(C/17351) *பழைய மாணவர் சங்கம்.*



யாழ்ப்பாணம் மாநகரசபை
நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
வருடாந்த மஹோற்சவகால
தற்காலிக கடைகளை ஒழுங்குபடுத்துதல் - 2001

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவ காலத்தில் கோயில் பிரதேசத்தை வர்த்தக மயமாக்காமல், அதன் புனிதத்தைப் பேணிக் காப்பதில் சகலரும் ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டிக்கொள்கின்றோம். தவிர்க்கமுடியாதபடி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புபவர்கள் 20.07.2001ஆம் திகதிக்கு முன்பதாக மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2001. 07. 09 (C/17348)

இ.இராமலிங்கம்,
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*



இலவசம்!

வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு
பிறந்தநாள், திருமண வாழ்த்துக்கள்
E-mail மூலம் இலவசமாக
அனுப்பி வைக்கவும்
மேலும் பல வசதிகளுக்கும் நாடுங்கள்

Srimurugan Computer Systems
303, K.K.S. Road, Jaffna.
Tel : 2670 3588 Fax 3214 e.mail:-del-smskr@eureka.lk (C/17349)



SHAMROCK
A/L 2002 & 2003
*இந்து.* : Mr. நித்தி., B.A.
(சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்)
*கிறிஸ்.* : Mrs. A. மல்லிகா, B.A
*அளவை.* :- Mr. மகிந்தன்,
B.com.(Houn)
*தமிழ், ஆங்கிலம், புவியியல்,*
Gr.4 முதல் O/L வரை
நடைபெறுகின்றன. (C/17353)



ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
9 வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN
சிட்டிசன்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)



நாகம்ஸ்
சுன்னாகம்
சுப்பர்ஸ்ரார் விஜயசாந்தி,
சரத்குமார், வெங்கடேஸ்
நடித்த
முதலமைச்சர் ஜெயந்தி
(ரீல்ஸ் வெளியீடு)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறுகளில் 6.30 காட்சியும் உண்டு
13.07.2001 முதல்
மாயி


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
01
-
07
-
1924



உதிர்வு
10
-
06
-
2001

## திருமதி ஆதிசிவம் இராசம்மா

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு எம்துயரில் கலந்துகொண்டு இறுதிக் கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவிகள் புரிந்து எமக்கு ஆறுதல் அளித்த எமது உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்று (10.07.2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்* (89908). பிரிவால் துயருறும் **பிள்ளைகள்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
14
-
12
-
1932



விண்ணில்
10
-
07
-
2000

## அமரர் த.திருநாவுக்கரசு

(நாவேந்தன்)

| | | | |
|---|---|---|---|
| மூவேந்தர் | தமிழ்குளித்து | மூச்சுவிடும் | சொல்லாளன் |
| முக்கனியின் | சாற்றிலைம | மூழ்கூடிக்கும் | வல்லாளன் |
| பாவேந்தர் | பரம்பரையில் | படைநடத்து | மெல்லாளன் |
| பத்திரிகைத் | துறைபுகுந்து | புகழியடும் | வில்லாளன் |
| சாவேந்தத் | துணியவொண்ணா | சரித்திரத்துப் | பெரும்பேறாம் |
| சாயாத | பெருவீறாம் | சலியாத | பெரும்பேறாம் |
| நாவேந்தன் | நடந்திட்டான் | நற்றமிழின் | பிரவாகம் |
| நாவிட்டுப் | போனதென்றே | நம்மன்னை | நலியாளோ! |

ஆண்டொன்று கண்டு அஞ்சலித்து நிற்கும்

*70/1, ஸைமன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/17355) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## முருகையா செல்வக்குமார்

வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முருகையா செல்வக்குமார் (யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்) நேற்று (09.07.2001) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

இவர் தாமோதரம்பிள்ளை முருகையா - காலஞ்சென்ற சௌந்தவாதேவி ஆகியோரின் அன்பு மகனும் செந்தில்குமார், செல்வரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பொன்னம்மாவின் பேரனும் காலஞ்சென்ற செல்வராசா - கணேசலிங்கம், சண்முகநாதன், நாகராசா, சிவதாஸ் ஆகியோரின் அன்பு மருமகனும் திரு,திருமதி லோகநாதன், வசந்தாதேவி சிறீவாமதேவன், கருணாகரன், சந்திரகுமார் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தா.முருகையா (மெக்கானிக்)
(தந்தை)

*வட்டு.தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (89917)

## தமிழ் - முஸ்லிம் கட்சிகள் இடம்பெறாத

# தேசிய அரசினால் தீர்வு கிடைக்க வாய்ப்பில்லை!

## அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு,ஜுலை10

தமிழ் - முஸ்லிம் கட்சிகள் அங்கம் வகிக்கக்கூடிய தேசிய அரசு உருவாக்கப்பட்டாலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். தேசியக் கட்சிகள் இரண்டும் மட்டும் சேர்ந்து தேசிய அரசு அமைப்பதால் இனப்பிரச்சினைக்கான தீர்வு மிகத் தொலைவுக்கே செல்லும்.

இப்படிக் கூறியுள்ளார் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான மகிந்த ராஜபக்ஷ.

தமது அமைச்சு அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய அரசு அமைக்கப்பட வேண்டுமானால், அது தமிழ் - சிங்கள கட்சிகளை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ.தே.கவும் சேர்ந்து தேசிய அரசு அமைக்க வேண்டும் என்று சில அமைச்சர்கள் கூறிவருகின்றனர். தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் சுய நலத்துடன் செயற்படுவதையே இது காட்டுகிறது.

தமிழ் - முஸ்லிம் கட்சிகளைப் புறந்தள்ளி அமைக்கப்படும் தேசிய அரசின் மூலம் யுத்தத்துக்கு முடிவு கட்டவும் முடியாது; இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

அப்படி ஓர் அரசை அமைத்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வு வெகு தூரத்துக்குச் சென்றுவிடும்.

தேசிய அரசு அமைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால், சகல கட்சிகளையும் அதில் அங்கம் பெற அழைப்பு விடுப்பேன் - என்றார். (உ-3)

## அல்லாரைச் சம்பவம்:

# மட்டு. பொது அமைப்புகள் வன்மையாகக் கண்டனம்

மட்டக்களப்பு,ஜுலை10

அல்லாரையில் சனியிரவு பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவத்தை மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழ்ப் பெண்களின் பாதுகாப்பை மீண்டும் ஒரு தடவை கேள்விக்குறியாக்கியுள்ளது இந்தச் சம்பவம் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவத்தைக் கண்டித்து 10 தமிழ்க்கட்சிகள் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய பகுதிகளில் போராட்டம் நடத்திய கையோடு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்துக்குப் பதிலாக பொதுசன பாதுகாப்புச் சட்டவிதிகளை நடைமுறைப்படுத்திய மறுநாளே இந்தக் கொடூரம் நிகழ்ந்துள்ளது.

பாலியல் வல்லுறவு என்பது சர்வதேசக் குற்றமாகிய நிலையில் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அது நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி பிரகடனப்படுத்தியது பொதுசனப் பாதுகாப்புச் சட்டமா அல்லது படையினர் பாதுகாப்புச் சட்டமா என்ற ஐயத்தை தமிழ் மக்கள் மத்தியில் இச்சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

படையினர் பாலியல் வல்லுறவில் ஈடுபடுவதைத் தடுக்க விசேட சட்டங்கள் ஆக்கப்பட்டு அதியுயர் தண்டனைகள் வழங்கப்படும்வரை இது போன்ற சம்பவங்களை எவராலும் தடுக்கமுடியாது.

- என்றுள்ளது. (உ-4)

# அரசுத் தரப்பு எம்.பி. ஒருவர் எதிர்த்தரப்புக்குத் திரும்பினார்!

கொழும்பு, ஜுலை10

அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப் போவதாக அரசின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரான ஆனந்த முனசிங்க அறிவித்துள்ளார்.

அரசுத் தரப்புப் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்துப்பேர் அரசின் செயற்பாடுகளில் அதிருப்தி தெரிவித்து ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பியிருந்தனர்.

அந்த எம்.பிக்களில் ஒருவரான ஆனந்த முனசிங்கவே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப்போவதாக நேற்று அறிவித்துள்ளார்.

தனது இந்த முடிவினால் தம் மீது அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம் எனத் தாம் கருதுவதாகவும் -

இதன் காரணமாகத் தாம் வெளிநாடு ஒன்றுக்குத் தற்காலிகமாகச் செல்லப்போவதாகவும் -

அவர் மேலும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-4)

## உயர்மட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணிடம் தகவல்களைச் சேகரித்தனர்.

இதற்கிடையில்-

பிரஸ்தாபப் பெண்ணை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய மந்திகை வைத்தியசாலை மருத்துவ அதிகாரி, குறிப்பிட்ட பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமைக்கான சாத்தியம் உள்ளதாகத் தெரிவித்திருப்பதாக அறிய வந்தது. (உ-3-117-173)

BIT தெரிவுப் பரீட்சை

BIT தெரிவுப் பரீட்சைக்காக விசேட வகுப்புக்களும், முன்னோடிப் பரீட்சைகளும் 14.07.2001, 15.07.2001 ஆகிய திகதிகளில் (சனி, ஞாயிறு) பி.ப.2.00 மணி முதல் நடைபெறவுள்ளன. யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த சகல மாணவர்களும் இதில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

(C/17354)

## வவுனியாவில் பகிஷ்கரிப்பு

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் படையினரால் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் நேற்று அடையாளப் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்ட இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் "இனவாதக் கண்களுக்கு மாணவர்களா விரோதிகள்", "மாணவர்கள் மீது புலிச்சாயம் பூசாதே!", "மாணவர்களின் கைகளில் பேனாவை மட்டும் தவழவிடு" என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த நிகழ்வின் இறுதியில் 'பேரினவாதி' என்ற கொடும்பாவியையும் மாணவர் எரியூட்டினர்.

*(மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்)* (உ-4)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான நிலையங்களில் மேற்கொள்வதற்கு திட்மிடப்பட்டிருந்த சமயத்தில் -

அந்தப் போராட்டங்கள் நடத்தப்படவிருந்த நிலைகளை உள்ளடக்கிய பகுதிகள் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கனரக வாகனங்களின் மூலம் மக்கள் போராட்டங்களுக்காக அப்பகுதிகளுக்கு கூட்டிவரப்படுவதும் அணிதிரள்வதும் தடுக்கப்பட்டிருக்கின்றது." (உ-ஒ)

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் கிருஷ்ணசாமி திவ்வியன் கைது செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து -

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந்த அறிவிப்புப் பற்றிய தகவல் கிடைத்ததும் யாழ்.மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், நேற்றிரவு உடனடியாக உயர் கல்வி, தகவல் தொழில்நுட்ப அமைச்சர் இந்திகா குணவர்தனவுடன் தொடர்புகொண்டு பல்கலைக்கழகத்தை மூடும் அறிவிப்பை வாபஸ் பெறும்படி கோரினார் என்றும் தெரிகின்றது.

இந்த விடயம் குறித்துத் தாம் இன்று பகல் அமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்று நேரில் அவருடன் விரிவாகப் பேசவிருப்பதாக தி. மகேஸ்வரன் எம்.பி. உதயனுக்குத் தெரிவித்தார். (உ-3)

## 50 இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோர் என இனங்காணப்பட்ட 21 பேரை உடன் தமிழகத்துக்கு அனுப்பவும் -

ஏனையோரை ஒரு வார காலத்துக்குள் அனுப்பவும் -

நடவடிக்கை எடுப்பதாக நீதிவான் அவர்களிடம் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து இது விடயமாக பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் ஆகியோருடன் அவர் தொடர்பு கொண்டு பேசினார்.

பிரஸ்தாப 21 மீனவர்களையும் விடுதலை செய்த யாழ்.நீதிவான், அவர்களை அவர்களின் படகுகள், மீன்பிடி உபகரணங்களுடன் இந்தியக் கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கும்படி காங்கேசன்துறை கடற்படை முகாம் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார். (உ-3-9-10-173)

# இஸ்ரேல் தூதுவர் இயங்க அனுமதித்ததற்குக் கண்டனம்

கொழும்பு,ஜுலை10

ஸ்ரீலங்காவில் இஸ்ரேல் தூதுவரை இயங்க அனுமதித்துள்ளதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அரசாங்கம் எடுத்துள்ள இந்த முடிவு முஸ்லிம் மக்களுக்கு எதிரானது என்றும் -

ஒட்டுமொத்தமாக முஸ்லிம் மக்கள் இதை எதிர்ப்பர் என்றும் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க, ஆயுத வியாபாரியான இஸ்ரேல் இலங்கையை அனுமதிக்காது என்றும் ஹக்கீம் மேலும் சொன்னார். (உ-3)

# ஐ.தே.கட்சியும் கண்டனம்

கொழும்பு,ஜுலை10

இஸ்ரேலின் தூதுவரை இலங்கையில் செயற்படுவதற்கு ஸ்ரீலங்கா அரசு அனுமதித்துள்ளதை ஐ.தே.கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

சர்வதேச யுத்தக் குற்றவாளி என்று வர்ணிக்கப்படுகின்ற இஸ்ரேலுக்கு எதிராக வெளிநாடுகளில் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் -

ஸ்ரீ லங்காவில் அவர்களின் தூதரகத்தை ஆரம்பிப்பது மிகவும் வேதனை அளிக்கிறது என்று ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மிலேச்சத்தனமான மனிதப் படுகொலைகளுக்குக் காரணமான இஸ்ரேலின் தூதரகத்தை இலங்கையில் செயற்பட அனுமதிப்பதன் மூலம் நாம அவர்களது செயற்பாட்டை அங்கீகரிக்கக் கூடாதென்றும் அந்த உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

# இராணுவ நடவடிக்கையால் பிரச்சினைக்கு தீர்வு கிட்டாது

## மதங்களின் கூட்டணி வலியுறுத்து

கொழும்பு,ஜுலை10

இனமோதலை இராணுவ நடவடிக்கையால் முடிவுக்குக் கொண்டு வர முடியாது. ஆகவே யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் நிபந்தனைகளின்றி பேச்சுக்களில் கலந்து கொள்ள அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று தேசிய ஐக்கியத்துக்கான மதங்களின் கூட்டணி என்ற அமைப்பின் உறுப்பினர் வண. சரத் ஜே.ஹெட்டியாராட்சி தெரிவித்தார்.

அண்மையில் குடாநாட்டுக்குத் தாம் மேற்கொண்டிருந்த விஜயத்தின் பெறுபேறுகளை விளக்குவதற்காக நேற்று அந்த அமைப்பினர் நடத்திய செய்தியாளர்கள் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைப்பின் தலைவர் வண.கும்புருகமுவ வஜிததேரர் கூறுகையில், நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டும் விடயத்தில் சமயத் தலைவர்கள் முக்கிய பங்கேற்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

யுத்தம் காரணமாக வடபகுதி மக்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தமது பிள்ளைகளுக்கு கல்வியைப் பெற்றுக் கொடுத்து அன்றாட வாழ்க்கையில் சுமுகமாக ஈடுபடுவதன் மூலம் அமைதியாக வாழவே குடாநாட்டு மக்கள் விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்து மதகுருவான மோகன் சர்மா கருத்துத் தெரிவிக்கையில், சமாதானம் என்பதே பெரும்பாலான யாழ். மக்களின் ஏகோபித்த கோரிக்கை என்றார்.

யுத்தம் மக்களுக்கு கஷ்டத்தைக் கொண்டுவருவதால் சகலரும் சமாதானத்தின் பாதையையே விரும்புவதாக மௌலவி சுபியான் கூறினார்.

வடக்கிலிருந்து சர்வமதக் குழு ஒன்றைத் தெற்கே அழைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தேசிய ஐக்கியத்துக்கான மதங்களின் கூட்டணிப் பிரமுகர்கள் அங்கு தெரிவித்துள்ளனர். (ஒ)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளோ அல்லது இராணுவச் சீருடை அணிந்த வேறு சிலரோ, இராணுவத்தினருக்கு களங்கம் ஏற்படுத்த இதைச் செய்திருக்கலாம் எனவும் -

பிரிகேடியர் சனத் கருணாரத்ன கூறியதாக அந்தச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் இந்தப் பாலியல் வல்லுறவுச் சம்பவத்தில் இராணுவச் சீருடை அணிந்த 4 ஆயுததாரிகள் ஈடுபட்டதாகவும் -

உதவி கேட்டு பெண்கள் அலறிய போது, அச்சம் காரணமாக அயலவர்கள் உதவிக்கு வரவில்லை எனவும் -

சம்பவம் நடந்தவுடன் இந்தப் பெண்கள் இராணுவத்திடமோ, பொலீஸாரிடமோ முறைப்பாடு செய்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி இருந்ததாகவும் - சுயாதீனச் செய்திகள் தெரிவித்ததாக அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-உ)

# கைதிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து தொடர்ந்து சுமார் ஐம்பது நாள்கள் நாசகாரத் தடுப்புப் பிரிவினரால் மிகக கொடூரமாக - மனிதநேயமற்ற முறையில் - தாங்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாக அவர்கள் கூறினர்.

மண்வெட்டி, கோடரிப் பிடிகளாலும், மணல் நிரப்பட்ட 'எஸ் லோன்' குழாய்களாலும் அவர்கள் மோசமாகத் தாக்கப்பட்டனர்.

ஒரு பொலீஸ் அதிகாரி தன்னுடைய சப்பாத்தில் மாட்டுச் சாணத்தைத் தோய்த்து அதனை நாக்கால் நக்கிச் சுத்தப்படுத்தித் தரும்படி அவர்களில் ஒருவரை நிர்பந்தப்படுத்தியுள்ளார்.

அதனை நிறைவேற்றாவிட்டால் கொடூரமாகத் தாக்கப்படக்கூடும் என்ற அச்சத்தினால் நாக்கால் நக்கி சப்பாத்தில் உள்ள சாணத்தை அந்தக் கைதி அகற்றியுள்ளார். அந்தச் சமயத்தில் வாந்தியெடுக்கும் நிலை அவருக்கு ஏற்பட்டது. அதனால் தண்ணீர் கேட்டபோது அவரது வாய்க்குள் சுடு நீர் ஊற்றப்பட்டது.

அதனால் அவரது வாய் மற்றும் தொண்டைப் பகுதி முழுவதும் புண்ணாகி, தற்போது எதுவும் உட்கொள்ள முடியாத நிலையில் அந்தக் கைதி சிரமப்படுகிறார்.

குறிப்பிட்ட ஓர் அதிகாரி மற்றொரு கைதியின் வாயில் சிறுநீர் கழித்ததாகவும் சொல்லப்பட்டது.

வாக்குமூலம் தந்துள்ளவர்களில் ஒருவருக்கு கைகளில் எட்டு விரல்களும் செயலிழந்து விட்டன. மேசையில் கைகளை வைத்து மரக்கட்டையால் தாக்கியதாலேயே அந்த விரல்கள் செயலிழந்துள்ளன - இவ்வாறு எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மனித உரிமைக் குழுவினரின் இத்தகைய விசாரணைகளால் ஏதாவது ஆக்கபூர்வ பயன் கிட்டுமா என்று கேட்கப்பட்டதற்கு -

சித்திரவதை புரிந்ததாகக் கூறப்படும் அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு அது குறித்து சட்ட மா அதிபரிடம் விவரங்கள் அனுப்பப்படும் என்றும்-

அவர் மேல் நீதிமன்றத்தில் அந்த அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரமுடியும் என்றும்-

பதிலளித்த எஸ்ஸ்ரீதரன், ஆனால் இதுவரை அப்படி நடந்ததாகத் தெரியவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். (உ-ஒ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.